அமிர்தவசனி

தெய்வீக மாதப் பத்திரிகை

மலர்: 7 இதழ் 10 விலை அ. 4	மன்மத ௵ தை ௴ ஜனவரி-பிப்ரவரி—1956	வருட சந்தா ரூ. 2-4-0

உழவாரத் திருப்பணியும் உள்ளத்தால் தியானமும் உளம் உருக்கும் தாண்டகமும் செய்த அன்பின் உருவான அப்பர்!
(பெரியபுராணச் சித்திரவிளக்கம் 22, பக்கம் 472)

பொருளடக்கம்

	பக்கம்
மார்கழி நீராடேலோரெம்பாவாய் (திருப்புகழ் மணி)	... 433
துறவு (அ. ராமமூர்த்தி)	... 436
கந்தர் அநுபூதி (கி. வா. ஜகந்நாதன்)	... 440
விழித்தபின்பு கனவுண்டா? (மு. பொன்னையா பிள்ளை,)	... 443
ஆண்டாளும் ஆண்டவனும் (ஆ. கி. ரங்கராஜன்)	... 449
மங்களா சாஸனம் (அன்பன்)	... 453
அருணகிரியும் ஐம்பூதத் தலங்களும் (சே. த. ராமலிங்கம் பிள்ளை, பி.ஏ., பி.டி.)	... 456
நான்காவது ஆண்டு அடியார் திருக்கூட்ட இறை பணி மன்றத்தாரின் திருப்புகழ் தலவழிபாட்டுத் திருவிழா (மருத்துவமணி)	... 460
தருமகுப்தர் (ரசபதி)	... 411
பெரியபுராணச் சித்திரவிளக்கம் (கி. வா. ஜ.)	... 472
1956 (*Thiruppugal Mani*)	... 477

அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள்

சித்திரை மீ˝ முதல் பங்குனி மீ˝ முடிய வருடச் சந்தா
ர் நாட்டிற்கு இலங்கை உள்பட ரூ. 2—4—0. நான்கு
டச் சந்தா ரூ. 8—4—0. அயல் நாடுகளுக்கு வருடச்
தா 4 ஷில்லிங்குகள். நான்கு வருடச் சந்தா 15 ஷில்
ங்குகள். போஸ்டல் ஆர்டராக அனுப்பவும்.

சித்திரை மாதத்திற்கு முன்னமேயே மன்மத ஆண்டிற்கு
ிய தங்கள் சந்தாத் தொகை 2—4—0ம் அனுப்பினல்
டர்ந்து பத்திரிகை அனுப்பப் பெறும். வருஷத்தின்
வில் சந்தாச் செலுத்தினல், சித்திரைமீ˝ முதல் உள்ள
ன் பகுதிகள் கைவசம் இருப்பதை உத்தேசித்து, சந்தா
ர்களாகச் சேர்க்கவோ மறுக்கவோ நேரும். ஆகையால்,
ண்டு பிறப்பதன் முன் சந்தா செலுத்துவதே நலம்.

அமிர்தவசனி, 54, பந்தர் தெரு, சென்னை.

அமிர்தவசனி

தெய்வீக மாதப்பத்திரிகை.

ஆசிரியர்: சு. முத்துஸ்வாமி

எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே

மலர் 7	மன்மத ௵ தை ௴ ஜனவரி—பிப்ரவரி-1956	இதழ் 10

"மார்கழி நீராடேலோரெம்பாவாய்"

(திருப்புகழ்மணி)

திருவாங்கூர் சமஸ்தானத்திற்குத் தெற்கே மூன்று மகா சமுத்திரங்கள் கூடுகின்றன. இந்துமகா சமுத்திரம், வங்காள விரிகுடா, அரபிக்கடல் ஆகிய இம்மூன்றும் கூடுமிடத்தில் கன்யாகுமரி கொலு வீற்றிருக்கின்றாள். ஆண்டவன் கருணை பிரம்மா, விஷ்ணு, சிவம் என்ற மூவகை அருட் கடல்களாகக் கூடியது போலும். இவை கூடிய நிகழ்ச்சியே ஆனந்த மகா சமுத்திரம்.

திருவாங்கூர் நிலத்திற்குள் சமுத்திரத்திலிருந்து அநேக கழிகளும், வாய்க்கால்களும் உட்சென்று நிலத் தலத்தை அலங்கரிக்கின்றன. இது போலவே,

---

கயவர்கள் வீட்டின் மீதும் கதிரொளி வீசுதல்போல்
நயமிலா நாயேன் மேலுன் நல்லருள் மலர்ந்திடாவோ.

தெய்வீக ஆனந்த சமுத்திரத்தி லிருந்து கணக்கிட முடியாத கழிகள் மானிட இதய தலத்தினுள் சென்று மக்களை மகிழ்விக்கின்றன. குளிர்ந்த நீரில் காலையில் நீராடி, கூட்டம் கூட்டமாகப் புகழ்பாடி, பக்தியினுல் ஊற்றெடுத்த கண்ணீர்கள் மார்பினில் கழிபோல் வெள்ளமெடுக்க, நாடெங்கும் மார்கழி மாத பஜன ஆனந்த சங்கம், மானிட இதயத்தில் ஓடும் கழிகள் போலக் காட்சி யளிக்கின்றன.

மார்கழி மாதத்தில் பக்தர்கள் கொண்டாடுகின்ற சம்பவங்கள் முக்கியமாக மூன்று உள்ளன. அவை வைகுண்ட ஏகாதசி. அதை ஒட்டி வரும் கிருத்திகை, திருவாதிரை, அதாவது மாணிக்கவாசகர் ஜோதியில் கலந்த பெரும் திருவிழா. ஆண்டாள் திருப்பாவை, திருவெம்பாவை உத்ஸவங்கள். ஸ்ரீ ஆண்டாளும் ஸ்ரீ ரங்கநாதனுடன் கலந்தாள். ஆகையால்தானே, கீதையில் ஸ்ரீ கிருஷ்ண பகவான் "மாதங்களில் மார் கழி மாதமாக நானிருக்கிறேன்" என்று சொன்னர். இந்தப் புண்ணிய மாதத்தில் நாடெங்கும் பக்திலயம், சங்கீதலயம், ஆத்மலயம் முதலியவை செறிந்து காணப்படுகின்றன.

அப்பர் சுவாமிகள் ஆதிரை நாளின் வண்ணத்தைப் போற்றுங்கால், பாடும் தொண்டர்களின் வேண்டுகோளை நினைப்புறுத்துகின்றுர்.

"துன்பமே உன்னைத் தொழாதநாள் என்பாரும்
இன்பமே உன்னை ஏத்து நாள் என்பாரும்
நும்மில் எம்மை நுழையப் பணியே என்பாரும்
அன்பன் ஆருர் ஆதிரை நாளால் அதுவண்ணம்"

கயமுகற் கிளைய கோனே கலியுக வரத வேலா
அயனரி போற்றும் பாதம் அடியன்முன் வந்திடாதோ

ஆண்டாள் திருப்பாவையில் உத்தேசிப்பது மறக்கத் தக்கதல்ல.

"மாயனை மன்னு வடமதுரை மைந்தனை
தூய பெருநீர் யமுனைத் துறைவனை
ஆயர் குலத்தினில் தோன்றும் அணிவிளக்கை
தாயைக் குடல்விளக்கம் செய்த தாமோதரனை
தூயோமாய் வந்துநாம் தூமலர் தூவித் தொழுது
வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்க
போய பிழையும் புகுதருவான் நின்றனவும்
தீயினில் தூசாகும் செப்பேலோர் எம்பாவாய்"

கருத்தைச் செலுத்தி மார்கழியில் பஜிப்பவர்கள் பாவம் தொலைந்திடும் என்பதை, உலக உபதேசமாக மாணிக்க வாசகரும் திருவெம்பாவையில் கூறியுள்ளார்.

இந்த மார்கழி மாதத்திலேயே திருத்தணி பஜனைத் திருவிழா (31 டிசம்பர்) ஏற்பட்டுள்ளது, ஆண்டவன் கருணை விசேஷம். இவ்வருஷம் இதே மாதத்தில் சோளங்கிபுரம் ஸ்ரீ லக்ஷ்மி நரசிம்மமூர்த்தி தேவஸ்தானத்தில் திருப்படி விழா ஆரம்பமா யிருப்பது, தொண்டர்களுக்குப் பேரானந்தத்தை அளிப்பதாகும்.

பக்தியும் ஞானமும், யமுனையும் கங்கையும் போலும் கரைபுரண்டு நாடெல்லாம் அளாவி அனுக்ரஹிக்கும் இந்த மாதத்தை, யாவர்தான் பலன் அறக் கைவிடுவார். மார்கழி வாழ்க.

திருவுளம் கனிந்தென்மீதுன் திருஷ்டியும் பட்டதாயின்
இருளது நீங்குமேநீ என்முகம் தனைப்பாராயோ.

துறவு

(அ. ராமமூர்த்தி)

ஜனகன் ஒரு அரசன். மகாஞானி என்று எல்லோராலும் போற்றப் பட்டவன். சுகப்பிரம ரிஷியே கூட அவனிடம் சகஜ நிலையைப் பற்றிய ஞானத்தை நிதர்சனமாகத் தெரிந்து கொண்டார் என்று சொல்லுவார்கள். ஞான வாழ்க்கைக்கு அவன் ஒரு விளக்கமாக இருந்தான். தத்துவம் அவனிடம் வாய்திறந்து பேசியது. வேதாந்திகளுக்கு அவன் ஒரு முக்கியமான உதாரணம்.

இவ்வளவு பெருமை பொருந்திய ஜனகன் அரியாசனத்திலே அமர்ந்து ஆட்சி செலுத்தினன். வாழ்க்கையின் சுக போகங்கள் அனைத்தையும் குறைவின்றி அனுபவித்தான். செல்வத்தை அவன் புறக்கணிக்கவில்லை. சரீர போஷணையிலும் கவனக் குறைவு காட்டவில்லை. அவனுக்கும் மனைவி மக்கள் உண்டு. ஆனால் அவன் ஒரு துறவி!

ஆம்! ஜனகன் ஒரு துறவி! அவன் நித்தியமான துறவு பூண்டவன். அவனுடைய துறவு, வாழ்க்கைக்கு அப்பாற்பட்டதல்ல; வாழ்க்கையையே தத்துவமாகக் கண்டு அனுபவித்தவன். வாழ்க்கை வேறு—ஞானம் வேறு என்ற மௌடீகத்தை உணர்வு பூர்வமாக ஒழித்தவன். காண்பன யாவும் கடவுள் மயமே என்ற உண்மையைக் கண்டவன்.

ஜனகனுடைய கதைகள் பல உண்டு. அவற்றிலிருந்து நாம் தெரிந்து கொள்ளும் உண்மைகளும் அநேகம். துறவு நிலையைப் பற்றிய தெளிவான விளக்கம் அவனுடைய வாழ்க்கையிலிருந்து நமக்குக் கிடைக்கிறது.

அருளெனுமுருவேஉன்றனருட்பொலிவுளன்னிற்பாய
பொருளுணர் புந்தியாமே அதையருள் புரிந்திடாயோ.

வாழ்க்கையை வெறுத்து, மனைவி மக்களைவிட்டு காட்டுக்கு ஓடி காஷாயத்துடன் திரிவது தான் துறவு என்ற எண்ணம் எவ்வளவு தவறானது என்று ஜனகன் நமக்குக் கூறுகிறான்.

இவ்வுலகம் இறைவனால் நமக்கு அளிக்கப்பட்ட ஒன்று. அதில் உள்ள வாழ்க்கை வசதிகள், சாதனங்கள் யாவும் மாசு மறுவற்றவைதான். அவற்றை அனுபவிப்பதில் தவறு ஏதும் இல்லை. அனுபவிக்கும் முறையில் தான் சரியோ தவறோ இருக்கிறது.

சுக அனுபவத்தை வெறுப்பது துறவல்ல. வாழ்க்கை வாழ்வதற்கே கொடுக்கப் பட்டுள்ளது. ஆனால் அந்த வாழ்வு தெய்வீகமாக இருக்க வேண்டும். இறைமை ஞானத்தோடு இணைந்திருக்க வேண்டும். நமது இறுதி லட்சியம் பரம்பொருளே என்ற உணர்வுடன் உள்ளம் எப்பொழுதும் இயங்க வேண்டும். சரியான பாதையி லிருந்து மாறுததாக இருக்கவேண்டும்.

எதையும் வெறுக்கவோ விரும்பவோ துறவு நிலையில் இயலாது: இறைவனுடைய படைப்பில் அனாவசியமானது ஏதும் கிடையாது. துறவிக்கு நாடும் காடும் ஒன்றேதான். தனது இலட்சியத்தைத் தவிர ஏனைய எல்லாம் ஒரு பொருட்டல்ல என்ற ஞானமே உண்மைத் துறவு.

எந்த நிலையிலும் தனது வாஸ்தவ நிலையை நழுவ விடாததுதான் துறவு. எது உண்மையோ அதை மட்டும் ஆசிரயிப்பது துறவு. எல்லாவற்றையும் பரம்பொருளாகக் கண்டு அதற்கேற்ற பாபமில்லாத வாழ்க்கையை நடத்துவதுதான் துறவு.

உண்மைத் துறவிக்கு உலகம் முழுவதும் சொந்தம். அவனுக்கென தனி அபிலாஷைகள் கிடையாது. அவ

சாகர மாற்றுநீரின் தன்மையை நோக்கா தேற்று
ஏகமாய்நிற்றல்போன்று எனையுனில்இணைத்திடாயோ.

னுடைய உணர்வு என்றும் சம நிலையிலேயே இருக்கும். அவன் எதையும் திரஸ்கரிப்பதுமில்லை. ஸ்வீகரிப்பது மில்லை. என்றும் சகஜ நிலையிலேயே இருப்பவன் அவன்.

துறவு என்ற வார்த்தைக்கு இழத்தல், வெறுத்தல், ஒழித்தல், திரஸ்கரித்தல் என்ற பொருள்களில் எதுவுமே பொருந்தா.

துறவியின் மன மண்டலத்தில் அவன் கொள்ள வேண்டியது எதுவோ அது மட்டும் நிறைந்திருக்கிறது. ஏனைய எல்லாம் அவனைத் துறந்து விடுகின்றனவே தவிர அவன் அவற்றைத் துறப்பதில்லை.

உண்மைத் துறவு சகஜ நிலைதான். இன்பத்திலும் துன்பத்திலும் ஒரே தன்மையைக் காண்பது மனத்துறவு. எப்பொழுதும் உண்மைப் பொருளிலேயே நாட்டம் செலுத்துவது காரணமாக, அவனை உண்மையற்ற எல்லாம். துறந்து விடுகின்றன. இது அவனுடைய உலகத் துறவு. சரீரம் அநித்ய மானது என்ற உணர்வு சரீரத் துறவு.

எல்லாம் கடவுள் மயமே என்ற ஞானத்தினல்—எல்லாவற்றிலும் இறைமையைத் தவிர வேறு எதையும் காண முடியாத காரணத்தால், உண்மைத் துறவி எதையும் ஒரு பொருட்டாக மதிக்க முடிவதில்லை அந்நிலையில் தான் அவன் துறவு பூண்டிருக்கிறான் என்று நாம் கூறலாம்.

துறவு நாம் ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்று. அது, தானே அமைய வேண்டும்.

மாட மாளிகை, கூட கோபுரங்கள், செல்வம், பிற வற்றேடும், மனைவி மக்களோடும் வாழ்வதால் துறவு பாதிக்கப் படுவதில்லை. எல்லாவற்றையும் உண்மைப்

நாகமீதேறி நின்று நடிக்குமா மயில்மீதேறும்
பாகமார்கோலம் என்றன்உளத்தினிற் பதித்திடாயோ

பொருளாகவே காண முடிந்தவன், எல்லாவற்றையும் துறந்து விடுகிறான் என்றுதான் அர்த்தம். ஜனகன் "எல்லாம் துச்சம்" என்ற உணர்வுடன் எல்லாவற்றோடும் வாழ்ந்தான். எனவே அவன் ஒரு துறவி.

துறவிக்கு "வேந்தனும் துரும்பு" என்ற உணர்வோடு, "துரும்பிலும் தூணிலும் இறைவன் உள்ளான்" என்ற உணர்வும் உண்டு.

உண்மையான ஞான உணர்வோடு எல்லாவற்றையும் ஏற்றுக் கொள்வது துறவு. பரம்பொருளைத் தவிர எல்லாவற்றையும் துச்சமாக உணர்வது துறவு.

ஸ்வீகரித்தல், திரஸ்கரித்தல் இரண்டிலும் மெய்யறிவு பிரகாசிக்குமானால் இரண்டுமே துறவுதான்.

பாரத விஞ்ஞானம் பரம்பொருளைப் பற்றிய ஆராய்ச்சிதான். இந்த ரீதியில் ஒன்றை ஏற்றுக் கொண்டாலும், தள்ளினாலும், விரும்பினாலும்,வெறுத்தாலும் முடிவு ஒன்றுதான்.

மலைக்கும் மடுவிற்கும் இடையே உள்ள வித்தியாசம் தோற்றமும் காலமுமே. இரண்டும் அற்ற நிலையில் அதைக் காண்பதுதான் துறவு. பொருளை வெறுப்பது துறவல்ல. அதைத் துச்சமாகக் காண்பது துறவு. வாழ்க்கையை வெறுப்பது துறவல்ல. ஆனால் அது அநித்யம் என்று உணர்வது துறவு.

அகம்புறத்தூய்மைஞான அருந்தவ ஆற்றல்இல்லான்
தகவில்ன்என்றென்றென்னைத் தள்ளுதல்தக்கதாமோ.

கந்தர் அநுபூதி

(கி. வா. ஜகந்நாதன்)

(399-ஆம் பக்கத் தொடர்ச்சி)

இப்படி இறைவனுடைய நிலையும் சக்தியினுடைய நிலையும் சேர்த்து ஒன்றான மூர்த்தி முருகன். அதற்கு அடையாளம், சிவபெருமானுக்கு அஞ்சு முகங்கள்; எம்பெருமாட்டிக்கு ஒரு முகம். அஞ்சும் ஒன்றும் சேர்ந்து ஆறு முகங்கள் உடைய எம்பெருமான் எழுந்தருளினன்.

"கந்தன் பற்றுக் கோடாக இருப்பவன். பஞ்ச பூதங்களின் சம்பந்தம் பெற்றுக் கருணையினாலே உலகத்துக்கு அருள் செய்ய வந்தவன். சிவனும் சக்தியும் இணைந்த ஒரு பரம்பொருள்" என்ற தத்துவங்களை யெல்லாம் கந்தன் என்ற திருநாமம் நமக்கு நன்றாகப் புலப்படுத்துகிறது. அவனைப் பற்றிய அநுபூதி என்று சிலர் சொல்லுவார்கள். அப்படிச் சொல்லுவதைக் காட்டிலும் கந்தனையே அநுபவித்த அநுபவத்தை அருணகிரிநாதர் இந்தப் பாட்டினால் சொன்னார் என்று கொள்வது பொருத்தம். கந்தர் அநுபூதி, கந்தருடைய திருவருளினாலே பெற்ற அநுபூதி அல்லது கந்தராகிய அநுபவம். இறைவனிடத்திலே ஈடுபட்டு உலகத்தை யெல்லாம் இறைவன் மயமாகக் கண்டு, கருவி கரணங்களெல்லாம் இறைவன் என்னும் பெருங் கடலிலே ஆழ்ந்து போய், வேறு ஒன்றும் தெரியாமல், எல்லாம் கந்தன் மயமாக இருந்த அநுபவத்தைச் சொல்லுவது எதுவோ அது கந்தர்அநுபூதி. அநுபூதி என்பது அநுபவம்.

இந்த நாட்டுச் சமய ஆசாரியர்களெல்லாம் தங்களுடைய அறிவின் திறத்தாலே ஆசாரியர்களாகவில்லை. அவர்கள் அறிவிலும் சிறந்து நிற்பார்கள்; ஆனால் வெறும் அறிவைக்கொண்டு அவர்களை ஆசாரியர்கள் என்று சொல்ல

உகப்புடன் காக்க செல்வம் உதவுறு பந்து நீயே
குகப்பெருமானேஎன்னும் கூக்குரல்குறிக்கொளாயோ.

முடியாது. அறிவு மாத்திரம் இருந்தால் அவர்களைப் புலவர் என்று பாராட்டலாம். ஆனால் அறிவுக்கு அப்பால் இறைவனுடைய திருவருள் நலத்திலே ஈடுபட்டு அநுபவம் செறிந்தவர்களாக இருந்தார்கள். அவர்கள் பிரசங்கம் பண்ணவேண்டும் என்பது இல்லை. அவர்கள் தம்முடைய கண்ணாலே பார்த்தால் போதும். அந்த அருள் கால்வாய் நம்முடைய உள்ளத்திலே பாய்ந்து விடும்.

"புணர்ந்த பாவமெல்லாம் பரிபூரணம்
உணர்ந்த ஞானி விழிபட ஓடுமே"

என்று சசிவர்ணபோதம் பேசுகின்றது. உண்மையான அருள் நிலையமாகிய பெரியவர்கள், அநுபவத்திலே தோய்ந்து நிற்கின்ற பெரியவர்கள், தம்முடைய சந்நிதானத்திலே வருகின்ற எல்லாருக்கும் அந்த அநுபவத்தின் வாசனையைக் கூட்டி விடுவார்கள். அறிவிலே மட்டும் சிறந்து நிற்பவனே, தனக்கு மிஞ்சிய அறிவுடைய ஒருவன் வந்தால் தாழ்ந்து போவான். அறிவுக்கு எல்லை உண்டு. அநுபவத்துக்கு எல்லை இல்லை.

திருவருளினாலே பெற்ற அநுபவத்தைப் பாடும் நூல் கந்தரநுபூதி என்பதைத் தெரிந்து கொண்டோம். இப்பொழுது ஒரு சந்தேகம் எழுகிறது. கந்தர் அநுபூதியில் உள்ள ஐம்பத்தொரு பாடல்களும் உபநிடதத்தைப் போல இறைவனுடைய திருவுருவத்தை மாத்திரம் சொல்லுகின்றனவா? உள்ளே புகுந்து பார்த்தால் அப்படி இல்லாத சில பாடல்களையும் காணலாம்.

"சிங்கார மடந்தையர் தீநெறிபோய்
மங்காமல் எனக்கு வரம் தருவாய்"

என்பது போலப் பல வேண்டுகோள்களும் உண்டு.

"விதிகாணும் உடம்பை விடாவினையேன்"

அடிமையின் குற்றமையா அருளுடன் பொறுத்திடாயேல்
படிமிசை யாவரென்னை அணைப்பவர் பரம மூர்த்தி!

என்று தம்மைப்பற்றி நைந்து கொள்ளும் பகுதிகளும் உண்டு.

"உல்லாச நிராகுல யோகவிதச்
சல்லாப விநோதனும் நியலையோ
எல்லாமற என்னை இழந்த நலம்
சொல்லாய் முருகா"

என்ற அநுபவமும் உண்டு. அப்படியானால் இந்த அநுபூதி முழுவதும் அநுபவம் அல்லவே என்ற கேள்வி எழும். கிளி பறக்கிறது. விடுதலை பெற்று பறக்கிறது. அழகான மரத்தில் உள்ள கனியைக் கோதுகிறது. ஆனால் எப்பொழுதும் உயரத்தான் அது பறந்து கொண்டிருக்குமா? மேலும் கீழும் பறந்து செல்லுவதுபோல, அருணகிரி நாதராகிய கிளி, மேலே அழகான பழத்தைக் கண்டு தாவிக் குதிக்கிறது. கீழே சில கிளிகளெல்லாம் கூட்டுக்குள்ளே இருப்பதைக்கண்டு கருணையினால் கொஞ்சம் பேசுகிறது. அந்தப் பாடல்கள் அத்தகைய நிலையிற் பாடியவை.

அப்படியானால் அது நான் இப்படிச்செய்தேன் என்று சொல்லியிருக்கிறதே என்றால், அதுதான் பெரியோர்களது இயற்கை. "நீ தப்புச் செய்தாய்" என்று சொல்லமாட்டார்கள். "நான் பண்ணிய தப்புக்கு இந்தப் பரிகாரம் வேண்டும்" என்று சொல்லுவார்கள். "எனக்குத் தலைவலி வந்தது; அமிருதாஞ்சனம் போட்டுக்கொண்டேன்" என்று சொன்னால், "உனக்குத் தலைவலி வந்தாலும் நீ போட்டுக்கொள்ள வேண்டும்" என்பது சொல்லாமலே அமையும். யாராவது நல்லது செய்தால், 'நீ நல்லது செய்தாய்" என்று சொன்னால் கேட்டுக் கொள்வார்கள். தவறு செய்தால், "நீ தவறு செய்கிறாய்" என்று சொன்னால் கோபம் வரும். கோபம் முதலிய குணங்களை யெல்லாம் அறுக்க வேண்டும் என்று நினைக்கின்ற பெரியவர்கள், அப்படிச் சொல்லிக்கூடக் கோபத்தை வருவிக்க மாட்டார்கள். அந்

மிடியினை நீக்க என்முன் விரைவினில் வருகஐயா
அடியரின் பாரம் தாங்கும் அப்பனே செந்திலானே.

தக் குற்றங்களை யெல்லாம் தமக்கு வந்ததாக நினைத்துக் கொண்டு பேசாது நிற்பார்கள். இதைத்தான் நைச்சியாநு சந்தானம் என்று சொல்லுவார்கள். வக்காலத்துப் பெறுத வக்கீல்கள் அவர்கள். நாம் படுகின்ற பாட்டையெல்லாம் அவர்கள் உணர்ந்து நமக்காக ஆண்டவனிடத்திலே முறையிடுபவர்கள்; நமக்குப் பிரதிநிதிகள், என்னுடைய கட்சிக்காரன் இப்படிச் சொல்லுகிறான் என்று சொல்லமாட்டார்கள். நானே இப்படியிருக்கிறேன் என்று சொல்லுவார்கள். அது அவர்களுடைய கருணை மிகுதியைக் காட்டுகிறது.

(தொடரும்)

விழித்தபின்பு கனவுண்டா?

(மு. பொன்னையா பிள்ளை.)

சென்ற ஆனி. மலர் 7 இதழ் 3ல் வேண்டுமா வேண்டாமா? எனும் வினுவுக்கு, விழித்த பின்பு கனவுண்டா என விடை புகன்றுளது. அதனை ஆராய்வாம்.

வேண்டும், வேண்டாமென்பது எதனை எனின், பிறவியையேயாம். பிறவி துக்கமெனக் கண்டோர், வேண்டாமென கடவுளைப் பிரார்த்தித்தனர். பிறவி சுகமெனக் கண்ட பலரும், (மலத்துள் புழுக்கள் போன்று) ரமிக்கின்றவர். பிறவி துக்கமெனக் கண்டும் நற்கர்மத்தால் பக்தி மேலிட்டு தியானிக்க, கடவுள் காட்சி யருளக் கண்டால் பிறவி வேண்டியதே என்றனர்.

பிறவி துக்கமா சுகமா வென்பதை ஆராய்வாம். பிறப்பின் முன்னம் விசாரிப்பதில்,(வந்தி சுதனைத் தேடுதல் போல்)

உன்னையே உன்னும் மேலோர் உறவினையருளி எற்கு
அன்னமும் நீரும் நீயே ஆகிவா அருண்மை மூர்த்தீ

பயன்தராது. சுருதி, பிறவிக்கு வித்து அவாவே என்றது.

"அவாவென்ப எல்லா உயிர்க்குமெஞ் ஞான்றுந்
தவாஅப் பிறப்பீனும் வித்து"

என்றது வாய்மை நூல்.

"ஆசை யறுமின்கள் ஆசை யறுமின்கள்
ஈசனோ டாயினும் ஆசை யறுமின்கள்
ஆசைப் படப்பட ஆய்வருந் துன்பங்கள்
ஆசை விடவிட ஆனந்த மாமே"

எனவும்,

"பிறந்தோ ருறுவது பெருகிய துன்பம்
பிறவா ருறுவது பெரும்பே ரின்பம்"

எனவும்,

"ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே
பேரா இயற்கை தரும்"

எனவும்,

"பற்றின் வருவது பிறவி
அற்ற லுறுவது இன்பம்"

எனவும்,

"ஆசா நிகளம் துகளா யினபின்
பேசா அனுபூதி பிறந்ததுவே"

எனவும்

பல அனுபூதிமான்கள் கூறிப் போந்தனர். பிறவியில் துக்கமேயாகும். துக்க காரணம் பிறவியாய சரீரமே. எங்கே சரீரம் அங்கே துக்கமென்பது உடன்பாடு; எங்கே சரீரமில்லை அங்கே துக்கமில்லை எனல் எதிர்மறை; சுழுத்தியிற் போல். ஆதலால் சரீரம் துக்க காரணமே. சரீர காரணம் யாதெனில், புண்ணியம், பாவம், மிசிரம் என்னும் மூவித

பன்னலம் புரியும் ஆற்றல் பரிவுடன் அருள்க; ஞான
மன்னவர் மனனம் செய்யும் மதிதயவுடைய கோவே.

கர்மம், கர்ம காரணம், இராகாதி 13 விருத்திகள், இதற்கு யான் எனதெனும் அபிமானமும், அபிமானத்திற்கு அவிவேகமும், இதற்கு அஞ்ஞானமும் காரணமாம். அஞ்ஞானமும் அனதி. காரணமில்லது.

ஆன்மாவை மறந்த மறதியே அஞ்ஞானம். இதன் காரியமே பிறவிவரை யாவும். ஆதலால் பிறவி துக்கமேயாம். தார, புத்திர, தனம், சத்தாதி விடயம் யாவுந் துக்கந் தருவனவே.

> "காமாதி யாலுங் கடுவெம் பசியாலும்,
> சாமாருந் துன்பமதைச் சாற்றுகிலேன்—கோமானே
> என்சா னுடம்பாலே பட்டதுய ரென்சொல்வேன்
> புண்பாலின் வேல்நுழைந்தாற் போல்"

என்றனர் அனுபவிகள்.

துக்கமே பந்தமெனவும், சுகமே முத்தி எனவும், இந்த இரண்டும் கற்பித மெனவும், ஆன்மா பிறப்பிறப்பற்ற சுயம்பெனவும், இதனிடம் பிறவி முதலிய விவகாரம் யாவும் கற்பித தாதாத்மிய அத்யாசத்தால் உண்டெனவும், உண்மையில் இல்லை எனவும் கூறுவர்.

"பிரஹ்மமாந் தனைமறந்த பேதமையே அஞ்ஞானம்" என்றதால், தன்னை மறந்த மறதியாய அஞ்ஞான நித்திரையிற் காணுங் கனவே ஜெகமாதி மூன்றுமாம்.

அஞ்ஞான நித்திரையானது ஆன்ம மறதி யானதால், ஆன்மஞான விழிப்பில் நீங்கும். நீங்கவே, கனவு பொய்யாக, அதிற்காணும் யாவும் பொய்யாம்.

மறப்பே நினைப்பு. நினைப்பே மறப்பு. நினைப்பு சகலமெனவும், மறப்பு கேவலமெனவும் அவஸ்தை இரண்டாம். இவை சிவ சகல கேவலம், ஈசசகல கேவலம், சிவ அலது

தந்தை தாயாவார் எங்கள் தப்பிதம் பொறுப்பரே நீ
சிந்தையால் வாக்கால்செய்த பாவத்தைச் சேதியாயோ.

பிரஹ்ம சகல கேவலம் என மூவிதம். அவஸ்தா ரகித சாக்ஷியாய ஆன்ம வடிவ சிவமே தானும்.

உலகம், அஸ்திபாதி பிரிய நாமரூப வடிவ ஐவகைத் தோற்றம். சீவ அவஸ்தையில் உலகம் வேறாத் தோன்றல் சகலமும், தோன்றாமை கேவலமெனவும் படும். ஈச அவஸ் தையில் உலகம் தானாகத் தோற்றல் சகலமெனவும், தோன் றாமை கேவலமெனவும் படும். சிவ அவஸ்தையில் உலகு நாம ரூபமின்றி சச்சிதானந்தமாகத் தோற்றல் சகலமென வும், தோன்றாமை கேவலமெனவும் படும்.

இவை யாவும் மனதின் செயலும் செயலின்மையுமாம். மனத்தின் குணம் 3. சத்துவ, ரஜஸ், தமஸ் என சீவ அவஸ் தையில், தமப்பிரதான மனம் ஆகார வடிவம். ஈச அவஸ்தை யில், ரஜஸ்பிரதான மனம் அறிவு வடிவம். சிவ அவஸ்தை யில், சத்துவப் பிரதான மனம் ஸ்புரண வடிவமாக நிகழும்.

இந்த மனத்தால், அஞ்ஞானமய நித்திரையில் கற்பிக் கப்படும் கனவிற் காணும் பிறவி முதலிய சர்வ விவகார மும், ஆன்மஞான விழிப்பில் கனவும் கனவிற் காணும் யாவும் பொய்யாம்.

மூன்றவஸ்தையில் விருத்தி மூன்றும். சீவ அவஸ்தை யில் மனோ விருத்தி அலது சத் விருத்தி என்றும், ஈச அவஸ்தையில் அறிவு விருத்தி அல்லது அகண்ட விருத்தி என்றும், சிவ அவஸ்தையில் விவேக விருத்தி அல்லது ஸ்புரண விருத்தி என்றும் சொல்லப்படும். விருத்தியால் விவகாரம் யாவும் உண்டாம். சர்வ விருத்தி நிரோதம் சமாதி. சமாதியிற்றான் ஆன்ம சாக்ஷாத்காரம் உண்டாகும்.

மனத்தில் நினைப்பு மறப்பு அற, அறிவாம்; அறிவில் அறிதல் அறியாமை அற, ஸ்புரணமாம்; ஸ்புரணத்தில் ஸ்புரிப்பும், ஏமானமும் நீங்க ஆன்மா மாத்ரமாம். மண் கட

எந்தைநீசற்றும்எண்ணு எளியனே காவாய் மெய்ம்மைக்
கந்தனே கார்த்திகேயா கருணையார் மேனியோனே.

மல்ல; மண்ணையன்றிக் கடம் இல்லை என்பதுபோல்,ஆன்மா ஸ்புரணுதியல்ல. ஆன்மாவை யன்றி அவையில்லை.

ஆன்மா, பூரணம்; நித்தியம்: விபுவாம். உபாதியாற் பலவாம். பலவெனல், கடவுபாதியால் ஆகாயம் பலவானற் போலும். கற்பிதமாம் உண்மையில் சுசாதி, விசாதி, சுவகத பேதரகிதம்.

இரச்சுவில் சர்ப்ப, தண்ட, மாலை, நீர்தாரை முதலிய ஆரோபந் தோன்றுவபோல், அதிஷ்டான ஆன்மாவில் ஆரோப சகமாதி,தோற்றல் மாத்திரமே. இரச்சுவை அறிய சர்ப்பாதி யாரோபமில்லை. அதுபோல், ஆன்ம சாக்ஷாத் காரத்தில் சகமாதி யாவும் இல்லையாம்.

மனமானது உலகாதியை சூனிய ஆகாயத்திற் கற்பிக்க வில்லை. இரச்சுவையன்றி சர்ப்ப தண்டாதி முதலிய கற்பனைகள் இல்லாததுபோலும், சுவரின்றிச் சித்திர கற்பனை கூடாதது போலும், அதிஷ்டானமாய ஆன்மாவினிடமே சகமாதிய ஆரோப கற்பிதமாம்.

பிறவி முதலிய சர்வ விவகாரமும், அஞ்ஞான நித்திரையில் மனதாற் கற்பிக்கப்பட்ட கற்பனையாம். இவை ஆன்ம ஞான மெனும் சாக்கிரத்தில் விழிக்கப் பொய்யாம். பொய்யாகவே பிறவி முதலிய சர்வமும் பொய்யாம். பொய்யாய பிறவியை, வேண்டும் வேண்டாமென்பதும் யாதாம், அறிக.

ஆன்மாவினிடமாக அத்தியாசமாகத் தோன்றும் உலகாதியையும், அதன் உண்மை வடிவமாய ஆன்மாவையும் உணர்த்தி யருளினர், அருணகிரியார் அநுபூதியில்.

ஜீவ சகலாவத்தையிற் றோன்றும் உலகு உருவன்று, கேவலத்திற் றோன்றும் அருவமுமன்று. ஈச சகலத்திற் றோன்றும் உள்ளதாய அறிவன்று. கேவலத்திற் றோன்றும் இல்லதும் அன்று. சிவ அவஸ்தை சகலத்தில் தோன்று

கருணை நீ செய்யாயாயின் கருணையங்கடலே! காட்சிப் பெருங்குணவானே உன்னைப் போற்றுமா றெவ்வாறே

மொளியாய மாயையுமன்று. கேவலத்திற் றேன்றும் இருளாய அஞ்ஞானமுமன்று. என்றும் மனோ வாக்குக்கு அகோசரமானதால் ஆன்மாவை 'என நின்றதுவே' எனக் குறிப்பிட்டார். அங்கிலேயர் அறிவர்.

இதுபற்றி அறிஞர்களின் அநுபவ மொழிகள் வருமாறு.

"சிந்தனையே பந்தமதாம் சிந்தனையே முத்தியதாம்
சிந்தனைப் போக்கே சுழுத்திசைப்பு—எந்தவிதம்
தானுணரினுங் கோல்போற் சாயாதிருத்தல் நலம்
சாலவுணர்ந் தேனின்று தான்."

என்றார்.

பகிர்முக சிந்தனையுளபோது உலகமும், சிந்தனையற்ற போது அசுத்த சுழுத்தியும், அந்தர்முக சிந்தனையுளபோது பிரஹ்மமும், சிந்தனையற்ற போது நனவிற் சுழுத்தியும்ஆம். பகிர்முகம் கற்பிதம். அந்தர்முகம் உண்மை. இருமுகமும் சாயாது நடுவில் திராசுக்கோல் முள்போல் சாயாது நிற்க சொரூபமாம்.

"மனத்தினு லெண்ணித்தானே வந்தவிவ் வுலகமாகும்
நினைத்திடி லதேக லோகம் நிற்பதிவ் வறிவிலன்றே
அனைத்தையுங் கடந்தப் பாலு மந்தமற் றறிவிதா மென்று
எனைத்தனி விசாரித் திட்டா லேகமாய் நிறைந்தோனனே"

எனவும்,

"நித்திரை தெளிந்த பின்னர் நிற்கின்ற கனவைப் போலும்
அத்தனையும் பொய்தானே ஆனந்த வடிவாம் நானே"

எனவும்,

"பிறப்பென்னும் பேதமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்ப தறிவு."

"என்னையே யில்லாமல் யான்பெற்ற தேதுமிலை
என்னையான் பெற்றிருந்த தெப்போதும்—என்னையன்றிப்

பரிவுடன் வாயால் பேசும் பயனிலா நண்பர் பல்லோர்
விரிவுடன் உலகிலுள்ளார்;வியனருள் முதல்நீ யன்றே

பந்தமிலை முத்தியிலை பார்க்கிலிவை யாராயும்
சிந்தனையு மில்லாத தே."

எனவும்,

"இயலறிவது இசையறிவது இனமறிவது உளதாம்
அயலறிவது அறிவதல அறிவறிவது அறிவே"

என்றார். ஆதலால் சர்வவிவகாரங்களும் மனதாற் கற்பிக்கப் பட்டதென்று விளங்குவதால், மனதின் ஸ்வரூப உண்மை விசாரித்தல் நலமாம்.

இந்த மனதை அடக்குதல் அரிதெனப் பலரும், எளிதெனச் சிலரும் கூறிப் போந்தனர். இதன் உண்மையை விளக்க அமிர்தவசனி விரும்பி யிடந்தருமாயின் முருகப் பெருமான் திருவருளால் சிறிது விளக்கலாம் அடுத்த இதழில்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

ஆண்டாளும் ஆண்டவனும்

[ஆ. கி. ரங்கராஜன்]

இன்ப மயமானது மார்கழி மாதம்! ஆம் இன்பமே தான்! கதிரவனின் கொடும் கிரணங்களின் தொல்லை ஒடுங்கிக் குளிர்ச்சியைப் பரப்பும் நாட்கள்! வைகறையிலே படுக்கையை விட்டு எழு முன்பே ஆனந்த கீதம் ஒலிக்கிறது! தாள வாத்யங்களுடன் திருப்பாவை என்னும் கோதைத் தமிழைப் பக்தர்கள் பாடி வருகின்றனர்.

அன்று இவ்வுலகம் அளந்தாய் அடிபோற்றி!
சென்றங்குத் தென்னிலங்கை செற்றாய் திறல்போற்றி!
பொன்றச் சகடம் உதைத்தாய் புகழ்போற்றி!
கன்று குணிலா எறிந்தாய் கழல்போற்றி!

தருணமு மிதுவே என்னைத் தாங்கலுன் பாரம் ஐயா
அருமறைபோற்றும்எங்கள் அத்தனே! அருள்செயாயோ

குன்று குடையாய் எடுத்தாய் குணம்போற்றி!
வென்று பகைகெடுக்கும் நின் கையில் வேல் போற்றி!
என்றென்றுன் சேவகமே ஏற்றிப் பறைகொள்வான்
இன்று யாம் வந்தோம் இரங்கேலோ ரெம்பாவாய்!

ஆஹா! என்ன அற்புதமான பாடல்! கேட்கக் கேட்கத் தெவிட்டாததாக அன்றோ உளது! ஆம். இறைவனின் புகழை இயம்புவோர் இயம்பினால் ஆரமுதம் போன்று ஆனந்தம் பெருக்கெடுத்தோடுகிறது! இந்தக் கீதம் எவர்க்கும் இயம்புவதற்கு எளிதாக உள்ளது. ஆகவே நாம் அனை வரும் உள்ளம் ஒத்துத் திரண்டு பாடினால், ஆண்டவனே நேரில் தரிசனம் அளிப்பன். ஏனெனில் அவ்வளவு கருத்துக்கள் அந்த அந்த கீதத்தில் செறிந்துள்ளன.

ஆண்டவன் அடியார்க்கு எளியவன். கொடியார்க்கு வலியவன். எந்த உருவத்திலும் காக்ஷி அளிப்பவன். இவற்றை இப் பாடல் விளக்குகிறது. அதாவது:—

ஒரு காலத்தில் மகாபலிச் சக்ரவர்த்தி எனும் அசுர வேந்தனை அடக்குவதற்காக சிறிய உருவில் (வாமன வதாரம்) பிராமண வேடத்தில் சென்று, அவனிடம் தனது அடியால் மூன்றடி மண் வேண்டிப் பெற்று, ஓரடியால் வானுலகையும், மற்றோர் அடியினால் இவ் வையகத்தையும் அளந்து, மூன்றும் அடியால் அவனைப் பாதாளத்தில் சிறைப் படுத்தினன் ஸ்ரீதரன்.

இராவணாதி அரக்கரை வதைக்கவும், அவனியோரையும் அமரரையும் காப்பாற்றவும், அயோத்தியை நாடிச் சென்று (இராமனாய் அவதரித்து,) அதன்பின் இலங்கைக்குக் கால் நடையாய்ச் சென்று கொடியவர் ஆட்சியை ஒழித்தான்.

யாதவகுல திலகனாய்த் தோன்றி கோகுலத்தில் வளர்ந்து, தனது புகழையும் மேன்மையையும் அனைவரும் அறியும் வண்ணம் பயங்கரச் சகடனை உதைத்தும், கன்றுக் குட்டியாக வந்த அசுரனை வீசி எறிந்தும் கொன்றான்.

பொன்செயும் பரிசவேதி போன்றநின் வனசபாதம்
என்தலை யேற்றிடற்கு எழுந்தருள் சிறந்த தேவே.

தனது மகிமையை உணராது கர்வம் கொண்டு இந்திரன் ஆயர்ப்பாடியில் கோரமான மழையைப் பொழிவிக்க, கோபாலர்களும் கோபியர்களும் இன்னல் தாங்காது தன்னைச் சரணடைய, அருகாமையில் இருந்த கோவர்த்தனம் என்ற மலையை அலக்ஷியமாய்ப் பிடுங்கித் தன் சுண்டு விரலால் தாங்கி, மழை பெய்யாது தடுத்தனன் இறைவன். நாரத முனிவரால் நாரணனே கண்ணனென்றறிந்த இந்திரன், நாணமும் திகிலும் கொண்டு கண்ணனை நாடி மன்னிப்பும் பெற்றான்.

வென்று பகை கெடுக்கும் நின் கையில் வேல் போற்றி!

"ஆஹா! என்ன அசாதாரணமான புகழ்ச்சி! ஆண்டாள்தான் இவ்வாறு கூறுகின்றாளா? திகிரி (சக்கரம்) ஏந்தும் கையனைத் திரிநேத்ரனாக வர்ணிக்கின்றாளே! இது எவ்வாறு பொருந்தும்?"

இவ்வாறு சிலர் ஐயத்தில் ஆழ்கிறார்கள். ஐயுற அவசியமே இல்லை. சற்றுக் கூர்ந்து ஆராயின், ஆண்டாள் கமலக் கண்ணனைக் கனல் கண்ணனாகக் காணுதல் நியாயமே என்பது புலப்படும்.

ஒரு காலத்தில் ஔவையின் புலமையைச் சோதிக்க, முருகப் பெருமான் நாவல் மரத்தில் கோபாலனாய் வடிவம் கொண்டு திருவிளையாடல் புரிந்தான்.

கீதையில் கண்ணன் இவ்விதம் கூறுகின்றான். "எவன் எந்த உருவத்தில் எந்த நாமத்தால் என்னைப் பூஜிக்கின்றானோ, அவனுக்கு அந்த உருவத்தில் அந்த நாமமுடையவனாகக் காக்ஷி தந்து அனுக்ரகம் புரிகின்றேன்."

மேலும் இறைவன் பக்தர்க்கு ஒருவனே. ஆண்டாள் கூறுவதெல்லாம் பரமனின் லீலைகளையும் ஆற்றலையும் பற்றித்தான். இதுபோன்று ஐயுறும் சந்தர்ப்பம் வேறொரு பாட்டிலும் காணப்படுகிறது.

மாவாய்ப் பிளந்தானை, மல்லரை மாட்டிய
தேவாதி தேவனை......

பச்சைமா மயில்மீதேறும் பழமுதிர் சோலையானே
சச்சிதானந்த தேவே சரண்சரண் சிறியனேனே.

மாவாய்ப் பிளந்தானை—குதிரையின் வடிவம் கொண்ட கேசி என்ற அரக்கனது வாயைப் பிளந்தவனாகிய கண்ணனை;

மாவாய்ப் பிளந்தானை—மாமரமாய் நின்ற சூரபத்மனைப் பிளந்தவனாகிய முருகனை,

மல்லரை மாட்டிய தேவாதி தேவனை—சாணூரன் முஷ்டிகன் என்ற மல்யுத்த அரக்கர்களைப் போரில் அழித்தவனாகிய சகலர்க்கும் அதிபனை;

மல்லரை மாட்டிய தேவாதி தேவனை—போரில் தளராத வீரத்துடன் எதிர்த்த தாரகன் முதலியோரை வீழ்த்தி தேவர்க்கெல்லாம் தலைமை வகித்து நின்ற சரவணபவனை.

இவ்வாறெல்லாம் ஆண்டாள் ஏன் வர்ணிக்கிறாள்! ஆண்டவன் மீது ஆறாக் காதல் கொண்டதன் விளைவாக, அவனது மகிமையைப் பலவாறு எடுத்து இயம்புகிறாள். அவள் கோரிய நாயகன் அரங்க நாதனேயாம். அரங்கம் எனினும் அம்பலம் எனினும் சபை என்றே பொருளாம். ஆகவே அன்பர்கள்—அடியார்கள் கூடிய திருச் சபைக்கும் திருவரங்கத்திற்கும் அதிபன் ஒருவனே என மாந்தர்கள் உணர்வதன் பொருட்டே கோதை இவ்வாறு கூறுகின்றாள். அவன் சகலவற்றினும் விளங்குவதோடு சகலமுமாகவும் விளங்குகின்றான் என்பதையே, திருப்பாவைப் பாடல்கள் அனைத்தும் வலியுறுத்துகின்றன. ஆகவே நாமும் ஐயம் விடுத்து அடியார் திருக்கூட்டத்தில் ஒன்றி அவன் புகழ் பாடுவோம்.

வங்கக் கடல் கடைந்த மாதவனைக் கேசவனைத்
திங்கள் திருமுகத்துச் சேயிழையார் சென்றிறைஞ்சி
அங்கப் பறைகொண்ட ஆற்றை அணிபுதுவைப்
பைங்கமலத் தண்தெரியல் பட்டர்பிரான் கோதை சொன்ன
சங்கத் தமிழ்மாலை முப்பதும் தப்பாமே
இங்குஇப் பரிசுரைப்பார் ஈரிரண்டு மால்வரைத்தோள்
செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால்
எங்கும் திருவருள் பெற்று இன்புறுவர் எம்பாவாய்!

எச்சமயத்தும் நின்னை இதயமாம் கமலத்தேற்றி
இச்சக மாயைதீர இனியருள் செய்திடாயோ.

மங்களா சாஸனம்

(அன்பன்)

ஆக்கையின் மானம் காக்க ஆடை வேண்டும். உதரப் பசியை ஒழிக்க உணவு தேவை. உண்பது நாழி உடுப்பது நான்கு முழம். அவ்வளவுதானே. அதற்கு சுவல்ப முயற்சி போதும். அதன்பின் ஓய்வு அதிகம். வியன்மிகும் அந்நேரத்தை விரயம் செய்யாமல், வாக்கால் எம்மானை வாழ்த்தலாம்; மனத்தால் இடையறாது மனனம் செய்யலாம். காயத்தால் செய்யும் பணிகளில் கலந்து கொள்ளலாம். இவைகளால், பிழையே உருவான ஆகாமிய வினை பிறவாது; பேறான இன்பம் பிறக்கும்.

அளவிலாமல் உயர்ந்த ஆடைகள், ஆபரணாதிகள், மாடி வீடுகள் வேண்டுமென்று எண்ணி யெண்ணி விங்குவதில் என்ன பயன்? ஆரம்பம் தொடங்கி, அவைகளைத் தேடுவதில் எத்தனை எத்தனை அவதி?

நல்லார் இடத்தை மறந்து, பொல்லார் இடத்தில் புகுந்து, மனிதத் தன்மையை ஓட்டி, பற்கள் தெரியக் காட்டி, துன்பம் முகத்தில் கூட்டி, நீ இந்திரன் சந்திரன் என்று நாட்டி, இரண்டு கைகளையும் நீட்டி, மானம் மதிப்பை வீட்டி, கொச்சைத் தமிழைக் கொட்டி, ஆதரவு தோன்ற, பயனான வாயால் எவர்க்கும் பல்லாண்டு பாடுவது பாவம். அரிது முயன்ற அதனால் பெறுவது அற்ப பலன். ஊன்றிப் பலரிடத்தும் உழன்றமையால், சிறிது சிறிதாகப் பொருள் சேரலாம். சேர்க்கும் காலத்தில் இருந்த துன்பம், அதைக் காக்கும் காலத்தில் இன்னும் அதிகரிக்கும்.

உணவைச் சுவைபட உருவாக்கி உண்டல்; உயர்ந்த ஆடைகளை உடுத்தல்; மதிப்பிற்குரிய நடையை மதித்துக் கண்டவர் மூலம் கண்ணெச்சில் காண்டல். இது என்ன தொல்லை! மாட்டுப் பாடு பட்டு இப்படி யெல்லாம அறிவை மந்தப்படுத்திக் கொள்ள வேண்டுமா? மணங் கமழ் மாலைகளை மற்றவர்கள் சூட்ட, வளர்ந்து கிழிர்கிறதே மார்பு. இந்தப் போலிப் போர்வையில் எத்தனை நாள் புகுந்திருக்க முடியும்? இதுதான் வாழ்க்கை யெனில், மாக்களினும் கேடுகெட்டவர்கள் மக்கள். இப்படி கேடுகெட்ட சிந்தனை, இடையறா

அச்சுதன் மருகா வானோர் அல்லலைத் தீர்த்த தீரா
முச்சுடர் தன்னில் ஆடும் முருகவந் தருள்செயாயோ.

மல் அவைகட்கு இல்லையல்லவா! உணவிற்குச் சிறிதளவு முயன்ற பின், பல நேரம் அவைகட்கு ஓய்வு. அதனால், உடலும் அவைகட்கு உரமா யிருக்கின்றன. பகுத்தறிவு இருக்கும் பாவத்தால், புலன் களைத் திருப்தி செய்ய, மக்கள் எண்ணத் தகாத எண்ணமெலாம் எண்ணி எண்ணி ஏங்குவது மரபாகுமா?

இவ்வகையில் ஊன்றி நோக்கினால், எவரும் எங்கும் இன்புற வில்லை. பிறப்பும் இறப்பும் பெருந்துன்பம். அவை, மறப்பும் நினைப்புமான வஞ்சக மாயா மனத்தால் வருபவை. துன்பம் தீர்ந்து இன்பம் நேர, என்றும் உயிர்க்கின்றது உடலில் உயிர். இவைகளை உணராமையால், ஆன்ம இதயத்தை மோசம் செய்து நாசப்படுத்துகின்றது லௌகிகம்.

இன்ப வடிவன் இறைவன். உள்ளத்தால் தன்னை உணர் வார்க்கு, அமைதி வழியை அருள்கின்றான் அந்த அம் மான். சிறந்த அவ்வழியிற் சேர்பவர், உலக வேட்டையை உதறு வர். ஆன்மாவை வாழ்விக்கும் நலஞ்சிறந்த அவர்கள் வழியில் வந்தவர்கள் நாங்கள்.

ஒப்பாரும் இல்லாத அப்பா! எம்பெருமானே! புனிதமான உனக்கே உரியது பொன்னுடை. சாதாரணமான எந்தப் பரிவட் டத்தை நீர் சாத்தினாலும், எங்கள் கண்கட்கு அது பொன்னுடை யாகவே புலனாகின்றது.

எங்களைப் பொறுத்தவரை, அன்னம், ஆடை, மணம் கமழ் மாலைகள் என்று நாங்கள் அவைகளை விலை கொடுத்து வாங்குவதே இல்லை.

நீர் கட்டிக் கழித்த சாதாரண ஆடைகளை, உமது ஸ்பரிசம் பட்டதென்று உவந்து, பொன்னுடையாக மதித்து அவைகளைப் போர்த்துக் கொள்வோம்.

உமக்கு நிவேதித்து எஞ்சிய மிச்சில் உணவை, உயர்ந்த அமு தம் இது என்று உண்பம்

தோன்றும்போதே மணத்தைத் தோற்றுவிப்பது திருத்துழாய். அதனுடன் மணம் கமழும் பலவகை மாலைகள். கருணையொடு நீ சூடிக் களைந்த அம்மாலைகளை, நின்மாலியம் என்று நினைப் போம்; காதல் பெருக அவைகளைச் சூடிக் களிப்போம்.

வச்சிரன் தனையாள் வள்ளி வலவனே கந்தநாதா
சிற்சுக வடிவாம் நின்னைச் சிந்திக்க அருளொணாதோ

எவர்க்கும் நாங்கள் அடிமைகள் அல்லர். தூய உனக்கே தொண்டு பட்டோம். இன்ன நிலையரான எங்களை, இன்ன திசையில் சென்று, இன்ன பணிகளைச் செய்க என்று கட்டளையிடுகின்றீர். அக்கட்டளையைச் சிரத்தில் ஏற்று, செல்லும் இடமெல்லாம் உம் சிறப்பைப் பறையறைகின்ற பக்தர்கள் ஆயினேம். அவ்வளவு தானா!

தேவ தேவனை உனக்கே உரியது திருவோணத் திருவிழா. அவ் விழாவில் கலந்து ஆர்வம் காண்போம். ஆதியஞ் சோதி உருவை அங்கு வைத்து இங்கு வந்த கோலத்தை நினைவூட்டும் மூர்த்தத்தைக் கும்பிடுவோம்.

படமெடுத்து, உடல் சுருட்டி, பாயலாகி அநந்தாழ்வார் பணி செய்கின்றார். வாழ்விக்கும் பணியாளர்க்கு அவரே வழிகாட்டி யாகின்றார். ஆம். அந்த அரியணை மேல் கண் வளரும் உமது அறிதுயில் அருமை எண்ணிப் புளகித்து உடலம் பூரிப்போம். பக்திப் பெருக்கத்தால், மெய்ம்மறந்து உமக்கே பல்லாண்டு பாடுவோம்.

பெருமிதம் கொண்டு இங்ஙனம் பேசுகின்றார் பெரியாழ்வார். ஆஹா! அவர் பொன்னுரைகள் என்ன அருமையாக இருக்கின்றன! கிளர்ச்சியை விளைவிக்கும் அவர் பாடலைக் கேளுங்கள்! இதோ வருகிறது அப்பாசுரம்.

> உடுத்துக் களைந்தநின் பீதக ஆடை உடுத்துக், கலத்த(து) உண்டு,
> தொடுத்த துழாய் மலர் சூடிக் களைந்தன சூடும் இத் தொண்டர்
> களோம்;
>
> விடுத்த திசைக் கருமம் திருத்தித், திருவோணத் திருவிழவில்
> படுத்த பைந் நாகணைப் பள்ளி கொண்டானுக்கே பல்லாண்டு
> பாடுதுமே.

(பொ – ரை.) (பெருமானே! தேவரீர் திருவரையில்) சாத்தி, (பிறகு) ஒதுக்கிய பொன்னுடையை (இதுவே போதுமென்று) உடுத்து, (நீர் அமுது செய்து) உண்கலத்தில் எஞ்சி யிருந்தவற்றைப் போக்யமாக உண்டு, (நீர் முதலில்) சூடிக் களைந்தவைக ளான திருத்துழாய் மலர் மாலைகளைச் சூட்டிக்கொள்ளும் தொண்டர்களாகிய நாங்கள், (நீர்) ஏவிய திசையில் (சென்று,) செய்யத் தகும் செயல்களைத் திருத்தமுறச் செய்து, படமெடுத்த பாம்புப் பாயலில் கண் வளரும் உமக்கே, திருவோணத் திருநாளில் (பயன் விளைய மகிழ்ந்து) பல்லாண்டு பாடுவோம், (எ – று).

அருளொடு இங்ஙனம் அமலனிடம் அன்று விண்ணப்பித்தார் ஆழ்வார். அதைப் பின்பற்றித்தான் இன்றைய நல்லோர் உலகம் நடைபெறுகின்றது.

மற்றொரு சிந்தையில்லா மனத்துடன் உன்னையுன்னும்
பற்றினை யருள்வை மெய்ம்மைப்பரங்கிரியிருந்ததேவே.

வகையான புத்தாடை வாங்கினேம்; சிறப்பிக்கும் அணிகள் செய்தோம்; எம்பெருமான் திருமுன்னர் இட்டோம். ததியோ தனம், வெண்பொங்கல் முதலியன தயாரித்தோம். நிவேதித் தோம். ஆராதனை முடிந்த பின் அவைகளை யாம் அணிந்தோம். குதூகலத்தோடு உணவு கொண்டோம். எமது ஆடைகளும் அணி களும், இவ்வகையில் அவனிலிருந்து வந்தவை. அருந்திய உணவும் அவன் தந்த பிட்சை. இது, வாழ்வாங்கு வாழ்கின்ற எங்கள் மனே யறத்து வளம்.

ஆலயத்தில் நிவேதித்த பொங்கல் சுண்டல் வாங்கி உண்டு பூரித்தோம். அர்ச்சகர் களைந்த நின்மாலியங்களை ஆர்வ மொடு ஏற்றேம். இவைகளின் தொடர்பால், இதயம் மகிழ்ந்து இருக்கின்றேம். அன்று பாடினர் ஆழ்வார். அவருடைய அரு ளிச் செயல்களின் துணைகொண்டு, எம்பெருமானை இன்றும் பாடு கின்றேம் நாங்கள். ஏழாட்காலும் பணி செய்வோம்; என்றும் குறையிலோம் எமக்கேலோர் எம்பாவாய் என்று உவந்து மகிழ் கிறது உலகம்.

அருணகிரியும் ஐம்பூதத்தலங்களும்

(திருப்புகழ் சதுரர் S. T. ராமலிங்கம் பிள்ளை B.A.,B.T.)

(406-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

2. திரு ஆனைக்கா :— பெருமானைப் பூசிக்கும்போது ஆறறி வுடைய மனிதர்க்கு மட்டுமே கூடும் என்பதில்லை. முந்தை நாளீட் டிய தவக்குறை முடிக்கும் திறத்தால் அல்திணைப் பொருளா யமைந் தவற்றிற்கும் கைகூடும். ஆண்டவனும் அவைகளின் பூசை ஏற்று அருளி யுள்ளமை கீழ்வரும் தலங்களின் சிறப்பால் அறியலாம்.

அணில்	பூசித்தது	குரங்கணின் முட்டம்
ஆமை	...	திருமணஞ்சேரி
ஈ	...	திரு ஈங்கோய்மலை
எறும்பு	...	திரு எறும்பீச்சுரம்
ஏறு	...	திருவையாறு
கருடன்	...	சிறுகுடி

கற்றதோர் அறிவினலே காணுதற்கியலா உன்னைப்
பற்றெலாம்அகன்றுகாணப் பரிந்தருள் செய்திடாயோ.

காகம்	...	திருக்குரங்கணில் முட்டம்
குதிரை	...	அயவந்தி
குரங்கு	...	குரங்காடுதுறை
சிங்கம்	...	திருநல்லூர்
தவளை	...	ஊற்றத்தூர்
நண்டு	...	திருந்துதேவன்குடி
நாரை	...	நாரையூர்
பசு	...	ஆமாத்தூர்
பன்றி	...	சிவபுரம்
பாம்பு	...	பாம்புரம்
மயில்	...	மாயூரம், மயிலை
மீன்	...	திருச்செந்தூர்
முயல்	...	திருப்பாதிரிப் புலியூர்
யானை	...	திருக்குற்றாலம் முதலியன
வண்டு	...	திருவெண்டுறை

எனவே எங்கேனும் யாதாகிப் பிறந்திடினும் இறை பூசை நேர்வதேல் எம்பெருமான் கருணை ஏற்படாமல் போகாது என்றறிக.

சிலந்தி செய் பூசை:

இந்தத் திருவானைக்காவில் சிலந்தி யொன்று முன்னுணர்வோடு பரமனைப் பரவலாயிற்று. மாலியவான் என்பவன் சிவ பக்தி முதிர்ந்த சிவகணத் தலைவரில் ஒருவன். இவனுக்கும் மற்றொரு பூதகணநாதனாகிய புஷ்பதந்தன் என்பானுக்கும் பொறாமை காரணமாகப் பூசல் நேர்ந்தது. அதன் விளைவினால் இருவரும் தம்மைத் தாமே சபித்துக் கொண்டனர். மாலியவான் ஒரு சிலந்தி யானான். வெள்ளானை ஒரு சமயம் ஒரு வெண்ணாவல் மரத்தடியில் சிவலிங்கமொன்றைக் கண்டது. அன்பு மீக்கூர அதனைத் தினந்தோறும் வழிபட்டு வந்தது. அதே சிவலிங்கப் பெருமானை மாலியவானாகி இருந்த சிலந்தியும் திருவருள் கூட்டச் சந்தித்தது. சிவலிங்கத் திருமேனி மரத்தடியில் இருப்பக்கண்டு, ஓர் ஆலயம் அமைக்க அவாக் கொண்டது. வாயிலிருந்து வரும் நூலினால் சம்புகேசர்க்குக் கோவிலும் மண்டபமும் கோபுரமும் எழிலுற அமைத்து மகிழ்ந்தது. மறு நாள் வழக்கப்படி வழிபட வந்த யானை சிலந்தி செய் கோவிலைச் சிதைத் தொழித்துப் பின் பூசையை

நீரினிற் குமிழிபோல நிலையிலா வாழ்வில் மாந்தர்
பேரினில் பொன்னிற் பெண்ணிற் பிதற்றிடல் போர்த்
[திடாயோ.

முடித்துப் போயிற்று. சிலந்தி பிறகு வந்தது. அழிந்த கோயிலைக் கண்டதும் அதற்குக் கோபம் பொங்கி வழிந்தோடியது. பரமனு லயத்தை அழித்த பாதகனைக் கொன்று பழிவாங்குவதே பரிகாரம் என எண்ணிக் காத்திருந்தது. மறுமுறை யானையும் வந்தது. சிலந்தி சீறி எழுந்து யானையின் தும்பிக்கையுள் புகுந்து குடைய லாயிற்று. தறுகண் யானை தான் பெரிதாயினும் துதிக்கை அத னுடலில் மிக நுண்ணிய பகுதியாம். ஆதலால் யானை, வலி தாங்க மாட்டாமல் துதிக்கையைத் தரையில் வீசியறைந்து உயிர்விட்டது. உள்ளே இருந்த சிலந்தியும் அதனல் உயிர் நீங்கியது. யானை முன் னைய வுருவுடன் சிவகண நாதராயிற்று. சிலந்தி சோழர் குலத் துதித்துப் பெருந்திருப்பணி புரிந்து பேறு பெற்றது.

கோச் செங்கனுன்:

சோறுடைத்தென்னும் சோழவள நாட்டதிபன் மகவிலா வறுமையுற்றுன். ஆலயப்பணி, அடியர் பணி, அரன்பணி செய்த சிறப்பால் அவன் மனைவி கருக்கொண்டாள். பிறப்பது பிள்ளையா பெண்ணு? அதன் குணநலம் எப்படி இருக்கும் என்ற கவலை அரச தம்பதிகள் இருவரையும் வாட்டியது. கருவும் புண்ணியப் பயனைப் போல் வளர்ந்தது. பிரசவம் இப்பவோ, இன்னும் சற்று நேரத் திலோ என்னும்படி இருந்தது. அப்போது அரசன் சோதிடம் வல்ல கணிதமாக்களை வரவழைத்துப் பிறக்கும் பிள்ளையின் வருங் காலமெப்படி யிருக்கும் என்று அறிவிக்கப் பணித்தான். கணிதர் களும் தமது விசாலகால அறிவுகொண்டு ஆராய்ந்து ஒரு மனதாக ஒரு முடிவு கூறினர். பிறக்கப் போவது ஆண்குழந்தை. அது இன்னும் சில நிமிஷங்களில் பிறக்கும். ஆனல் குழந்தை பிறக்க இருக்கும் நேரத்திற்கு மேலும் இரண்டொரு நிமிஷம் கடந்து பிறந்தால், இந்த நன்மைந்தன் உலகம் போற்ற வாழும் பெரும் பேரரசாய் ஆலயத் திருப்பணியாதிய இயற்றுவன்" என்றனர். இதனை மறைவிலிருந்து கேட்ட தோழி ஓடோடிச் சென்று இராச மாதேவிக்கு உரைத்தனள். பிரசவ வேதனையால் பெரிதும் துன் புற்றுலும் இராணியார், வருத்தமெலாம் மறந்து தமது அருமை மகன் வருங்காலத்தில் வளமுற வாழவேண்டுமென்ற ஒரே அவாக் கொண்டார். தாதியரை அழைத்துத் தமது இரு கால்களையும் மேலே தூக்கிக் கட்டிவிடுமாறு பணித்தார். சோதிடர் கூறியு நல் லோரை நணுகிய பின்பே பிரசவம் நிகழவேண்டும். அப்போது தான் காலை அவிழ்க்கவேண்டுமென்று கண்டிப்பான கட்டளையிட்

சீரிய தொண்டர்போற்றும் சிறப்புறு சடக்கரத்தை
வாரியே பருகி வாழும் வாழ்வினை யருள்செயாயோ.

டாள். இயற்கையை மீறி எதையும் செய்யலாகாது. அதனல் தாயின் ஆவிக்கே மோசம் வருமென்று சொல்லிப் பலர் தடுத்தனர். இராணியார் தம் கருத்தை மாற்றிக் கொள்ளவில்லை. கால்கள் மேலே கட்டப்பட்டன. இராணியார்க்குப் பிரசவநோய்க் கடுமையாயிற்று. சோதிடர் குறித்த நேரம் குறுகியது. சேடியர் காலவிழ்த்தனர்; தேவியார் தங்க விக்கிரகம்போன்ற அழகிய ஆண் மகனை ஈன்றெடுத்தார். இயற்கைக்கு மாருகக் கருப்பையில் சிறிது போழ்து இருந்து வெளிவந்தமையால் குழந்தையின் கண் சிவந்திருந்தது. தாய், அடைந்த துன்பங்கள் அனைத்தையும் மறந்து "பிறந்தது பெண்ணு? ஆணு?" என்றனர். சேடியர் "ஆண் மகன் தான்" என்று குழந்தையைக் காட்டினர். இராணியார் பையலென்றபோதே பரிந்தெடுத்துச் செய்ய முகத்திலணைத்து உச்சி மோந்து, "என் கோச்செங்கட் கோமானே" என்று கூறி கன்னத்தைக் கிள்ளி முத்தமிட்டாள். கட்டித் தழுவிய நிலையில் இராணியார் கண்களில் ஒரு தனி ஒளி வந்தது; முகத்தில் இளமுறுவலரும்பியது. கொஞ்ச நேரத்தில் அணைத்த கரங்கள் பிடியை விட்டன. மலர்ந்த விழிகள் மூடின. அப்படியே அவளது ஆவியும் உடல்விட்டோடியது. "எல்லோரும் தாயன்பே தலையன்பு" எனப் போற்றினர். அந்த அருமைக் குழந்தைப் பெருமான்தான் ஆனைக் காவினண்ணலுக்கு ஆலயமெடுத்த சிலந்தி மாலியவான் ஆவார். அவர்தான் "எண்தோளீசற்கு எழில்மாடம் எழுபது செய்து, உலக மாண்ட திருக்குலத்து வளச்சோழன் எனப்படும்" கோச் செங்கட் சோழ நாயனாராகும். இவ்வரலாற்றை நமது ஆளுடை அரசுகள்,

> புத்தியினற் சிலந்தியும் தன் வாயில் நூலால்
> பொதுப் பந்தரது விழைத்துச் சருகால் மேய்ந்த
> சித்தியினல் அரசாண்டு சிறப்புச் செய்யச்
> சிவகணத்துப் புகப் பெய்தார்"

> "சிலந்தியும் ஆனைக்காவில் திருநிழல் பந்தர் செய்து
> உலந்தவ ணிறந்தபோதே கோச்செங்க ணுனுமாகக்
> கலந்த நீர்க் காவிரிசூழ் சோணுட்டுச் சோழர் தங்கள்
> குலந்தனிற் பிறப்பித்திட்டார் குறுக்கை வீரட்டனுரே"

> "திருவானைக் காவிலோர் சிலந்திக் கந்நாள்
> கோச் சோழர் குலத்தரசு கொடுத்தார் போலும்
> குடந்தைக் கீழ்க் கோட்டத்தெம் கூத்தனரே"

என்றும், ஆளுடைய பிள்ளையார்

கழலினை பணிவார்கண்ட கற்பகத் தருவே மெய்ம்மைக்
குழகுறு கமலவண்ணு குடியெனுள் கொண்டிடாயோ

"செங்கட் பெயர் கொண்டவன் செம்பியர் கோ
னங்கட் கருணை பெரிதாயவனே"

என்றும், ஆளுடை நம்பிகள் ஆனைக்காப் பதிகத்தில் அநேகமாக எல்லாப் பாடல்களிலும் சிலந்திக்கருளிய திறத்தைப் பாடியுள்ளனர். இந்த வரலாற்றை விரிவாகத் திருத்தொண்டர் புராணம், திருவானைக்கா உலா என்னும் நூல்கள் கூறுகின்றன.

இந்த ஐதிகத்தை நினைவுறுத்துமாப்போல இன்றைக்கும் பெருமான் சந்நிதிக்கு முன், சிலந்தி வலையமைத்ததுபோல ஒன்பது துவாரம் கொண்ட ஒரு சாளரம் உண்டு. இதன் மூலமாக பெருமானைத் தரிசிப்போர், பெரும்பேறு நல்கும் நவதீர்த்தமாடிய நல்ல புண்ணியம் பெறுவரென்பர். இவையனைத்தும் நமது அருணை வள்ளலைப் பிணித்தன. அவற்றைச் சிவமார் திருப்புகழில்,

"திரைக் காவிரிக்கே கரைக்கானகத்தே
சிவத்யான முற்றூர்—சிலந்தி நூல் செய்
திருக்காவணத்தே இருப்பார் அருட்கூர்
திருச்சாலகச் சோதி—தம்பிரானே"

(அலைமோதும் பொன்னிக்கரை யடுத்த காட்டிலே சிவத்தியானமுற்ற ஓர் சிலந்தி (தன் வாய்) நூலிழைத்த பந்தரடியில் எழுந்தருளுமவரும், அருள்மிக்க அழகிய (சாலகம் என்னும்) சிலந்திவலைச் சாளரத்தின் அடியில் (எல்லோரும் தரிசிக்குமாறு) விளங்கும் சோதி வானவருமான மாதேவரது கூர்ந்த அருள் மயமயமான தம்பிரானே என்று பாடிப் பரவசப்படுகிறார்.

எனவே சிலந்திக்கருளிய சிவனார் திருவருள் கூறும் திருச்சாலகச் சோதி, செவ்வேள் என்பது இதனில் விளங்குகிறதல்லவா?

(தொடரும்)

நான்காவது ஆண்டு
அடியார் திருக்கூட்ட இறைபணி மன்றத்தாரின்
(31-12-55) திருப்புகழ்த் தலவழிபாட்டுத் திருவிழா
(மருத்துவமணி)

நான்கு ஆண்டுகளாக இத்திருப்புகழ்த் தொண்டர்கள், ஆண்டுக்கொரு நன்னாளாகிய வருஷத்தின் கடைசி நாளன்று சென்

னையை விட்டு ஸ்பெஷல் பஸ்களில் புறப்பட்டு, ஒரே நாளில் சென்னைக்கு அண்மையிலுள்ள பாடல்பெற்ற முக்கிய தலங்களான திருவான்மியூர், திருப்போரூர், திருக்கழுக்குன்றம், குருபழனி (மதுராந்தகம்), காஞ்சிபுரம் முதலிய தலங்களிற் சென்று, ஆங்காங்கு திருப்புகழ் பஜனை, இறைவழிபாடு, சொற்பொழிவுகள் செய்தனர்.

இந்த ஆண்டு 225 அடியார்கள் இப்புனித யாத்திரையில் பங்கெடுத்தார்கள். வழக்கம்போல் ஆரம்பம் முதல் யாத்திரை முடியும் வரை, நமது பேரன்புடைய ஆசிரியர் குகஸ்ரீ ரசபதி அவர்கள் தலைமை வகித்து, அடியார்களுடன் கூடவே இருந்து, திருக்கழுக்குன்றத்திலும், காஞ்சிபுரம் குமர கோட்டத்திலும், சகல லோகமும் க்ஷேமமாய் இருக்க சொற் பொழிவின்கண் ஆண்டவனைப் பிரார்த்தித்தார்கள்.

பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள், அதிகாலையிலேயே திருவான்மியூர் வந்து, தொண்டர்களுடன் இறைவழிபாட்டிற் கலந்து ஆசிகூறி வழி அனுப்பினார்கள்.

திருப்போரூரில் மாடவீதி பஜனை, கோயில் வழிபாடு முடிந்தவுடன், மடாதிபதி ஸ்ரீ சிதம்பர ஸ்வாமிகள் அவர்கள், தொண்டர்களை வரவேற்றார்கள்.

திருக்கழுக்குன்றத்தில் அடியார்கள், திருவிழாத் தொண்டர்களை மேள வாத்தியங்களுடன் வரவேற்று உபசரித்த பின், மலை அடிவாரத்திலிருந்து தாழக் கோயில்வரை திருப்புகழ் பஜனைசெய்ய உதவினார்கள்.

மாலை 3 மணிக்கு ஆசிரியர் இளவழகனார் அவர்களின் குருகுலத்துக்கு அண்மையில் குருபழனி ஆண்டவர் வெட்ட வெளியில் (வட திருச்சிற்றம்பலத்தில்) தொண்டர்களுக்குத் தரிசனம் கொடுத்தார். உடனே பக்தர்கள் பஜனை ஆற்றினார்கள். ஆசிரியர் அடியார்களுக்கு ஆசிமொழி சொல்லுகையில், அடுத்த ஆண்டு அதே நாளில் இத்திருவிழாவின் ஞாபகார்த்தமாக, குருபழனியில் திருப்புகழ் மாநாடு கூடும் என்று வாக்குறுதி செய்தார்கள்.

காஞ்சியில் இரவு 6—8 வரை ஸ்ரீ வரதராஜப்பெருமாள், ஸ்ரீ ஏகாம்பரேஸ்வரர், ஸ்ரீ காமாக்ஷி அம்மன் கோயில்களில் வழிபாடு முடித்து, குமரகோட்டத்தில் காஞ்சிபுரம் அடியார்களுடன் சென்னை அடியார்கள் கலந்து ஓர் பெரிய திருக்கூட்டமாகக்

நானெனும் அகந்தைநீக்கி நற்றவ வாழ்க்கைவாழ
நானிலம் போற்றும் எங்கள் நாதனே அருள்செயாயோ.

காண நின்ற காட்சி அற்புதமாக இருந்தது. திருப்புகழ் பஜனைக்குப் பிறகு குகஸ்ரீ ரசபதி அவர்களின் சொற்பொழிவு நிகழ்ந்தபின், இரவு 12 மணிக்கு திருத்தணி சேர்ந்து படி விழா நடத்தி, தணி கேசன் கோவில் வழிபாடு முடித்து, (1-1-56 ஆன) புத்தாண்டில் முருகன் அருள் பெற்று சௌகரியமாக சென்னை திரும்பினார்கள்.

திருத்தணிகைத் திருப்படித் திருவிழாவின் உணர்ச்சியை, அதே நாளில் பல தலங்களிலும் உள்ள பக்தர்கள் அடைய இம் முயற்சி நல்லதொரு வாய்ப்பு என்று எல்லாராலும் எண்ணப்படுகிறது.

முருகன் வாழ்க ! திருப்புகழ் வாழ்க !

சிவநேசச் செல்வர்கள் 10

தருமகுப்தர்

(ரசபதி)

நலம் சிறந்தது விதர்ப்ப நாடு. சால்பு நிறைந்தவர் **சத்யசாதனர்.** அவரே அந்நாட்டு அரசர். பெயர்க்கு ஏற்ப, தூய்மை பெருகியவர். மன்னர் ஆட்சியில் குடிகள் மகிழ்ந்தனர். செல்வம் சிறந்தார்; கலைகளிற் கனிந்தார்; தானத்தில் தழைத்தார்; தர்ம கற்பகம் என்று எங்கும் அவர் பெயர் எழுந்தது.

அரசி **விமலா** அழகில் சிறந்தாள்; அறிவில் உயர்ந்தாள்; பார்த்திபர் பணியில் பெரும் பங்கு கொண்டாள். உயர்ந்த இத் தம்பதிகள் புகழ், உலகமெலாம் பரவியது. எந்நாட்டு அரசரும் இதைக் கேட்டு எரிச்சல் அடைந்தனர். தம் கடமையில் தவறாத வரை, தரணி யெல்லாம் பாராட்டுவதில் தவறு இல்லை. பிறர் அடையும் பெருமையைக் காணின், ஏழை ஆன்ம இதயத்தில் சேற்று நாற்றம் சேரும் போலும். அதனால்தான், தன்னை மறைத்துக் கடனாற்றுக என்கிறது தர்ம சாஸ்திரம். பாய் ஒன்றில் பத்துத் துறவிகள் படுக்க முடியும்; பாராள்பவரோ, கனிந்த பயனை ஒன்று பட்டுக் காண்பது இல்லை.

* * *

புருவமையத்துள் ஓங்கும் புனிதமார் சிவமே! ஆறு திருமுகம் பூண்டமூர்த்தீ! திருவருள் தெளித்திடாயோ.

கனன்றெழுந்த பகைமைக் காற்று, விரவிப் பல உருவில் வீசி யது. முடியுடை மன்னர் பலர், திடீரென்று ஊரை முற்றுகை யிட்டனர். அஞ்சியது குடிகள் நெஞ்சம்.

சத்தியசாதனர் செய்தியை அறிந்தார். இருக்கும் படைகளைத் திரட்டினர். எதிரிகளை மும்முரமாக எதிர்த்தார். இரு நாள் போரில், பகைவர்கள் பட்ட பரிபவம் பல. உதவிப் படை, எதிரி கட்கு வளர்ந்து மென்மேலும் வருகிறது. சூழ்ச்சி யந்திரமும் சுழன்றது. முடிவு என்ன?

மாலை மணி ஆறு. உறவு கொள்பவன்போல் ஒருவன் வந் தான். சத்யசாதனர், வணக்கம் கண்டு அவனை வரவேற்றார். தொழுத கையுள்ளும் படையிருக்கும் என்பது அரசருக்குத் தோன் றவே யில்லை. சிறிய போரில் அரசர் சிந்தனை செலுத்தினர். அச் சமயம் பார்த்து, அவர் பின்வந்த அவனால், ஐயையோ ஐயோ! தடம் புரண்டது சத்தியசாதனர் தலை.

மன்னர் போரில் மடிந்தார் என்றதும், விதர்ப்ப நாட்டுச் சேனைகள் விலவிலத்தன. கட்டுக் கோப்புக் கலகலத்தது. இதை எதிர்பார்த்த எதிரிகள், எழும்பிக் குதித்தனர் கோட்டைக் கொடிமரம் வீழ்ந்தது; பகைவர் கொடிகள் படபடத்தன.

ஊரைக் கொள்ளையிட உத்தரவு பிறந்தது. அதனால் பட்ட ணம் முழுதும் பகைவர் படைகள். குடிகள் குமுறினர். எங்கும் அல்லோல கல்லோலம்!

* * *

மன்னர் இறந்த செய்தி, இரவு ஏழு மணிக்குத்தான் அரசிக்கு எட்டியது. அதிர்ந்தது மனம். அதே நேரத்தில், பகைவர்கள் குபு குபு என்று அரண்மனைக்குள்ளும் புகுந்தனர். என்ன செய்வது இப்போது? ஒன்றுமே தோன்றவில்லை. நடுங்கியது தேகம்.

மகாராணீ! கருவில் இருக்கும் சேய் காக்கப்பட வேண்டும் என்று கையைப் பற்றினள் ஒரு தாதி. அதிர்ந்த மனத்து அரசியை, இருளடர்ந்த சுரங்க வழியே ஈர்த்துச் சென் றாள். துறு துறுத்த நடையில், இருவரும் வெகுதூரம் சென்றனர். இறுதியில் எதிர்ப்பட்டது ஒரு சுவர். தடவிய தாதியின் கைக்குத் தட்டுப்பட்டது ஒரு கதவு. கையில் இருந்த சாவியால் கதவைத் திறந்தாள். வெளியில் புழுதி படிந்த ஒரு குடிசை. அதனில் இருந்து வெளிப்பட்டதும் எதிர்ப்பட்டது ஒரு காடு.

அம்மா! இனியும் நான் தொடர்வதற்கு இல்லை. தீய பகைவர் கள், உம்மை அந்தப் புரத்துள் தேடுவர். இல்லாமையால் வெளி

மருமலர்க் குழலாள்வல்லி மணவனே மதிமிக்கார
தருகநின்பாத த்யானம் தண்ணளி மிகுந்த கோவே.

யேறும் அந்தரங்க வழியை ஆய்வர். வழியறிந்து வந்தாரேல், இக் கதவு திறந்திருக்கக் காண்பர். இங்கும் தொடர்வர் பாவிகள். உம்மைப் பற்றுவர். படாதபாடு படுத்துவர். அப்படி ஆகாதபடி, பூட்டிட்டு உள்ளே போய்விடுகிறேன் நான். ஒருக்கால் வஞ்சகர் அவர்கள் வந்தாலும், போட்ட பூட்டு போட்டபடியே இருப்பதால், அரண்மனைக்குள்தான் இருப்பீர் என்று அப்போதே திரும்பி விடுவர். கடவுள்தான் இந்தக் காட்டில் உம்மைக் காப்பாற்ற வேண்டும். கருப்ப சிசு, காவலர் கால்வழியாய் உலகை ஆளும் காலமும் வரலாம்: இறைவன் திருவருளை எவர் அறிய முடியும்? வருகிறேன்! பத்திரம் அம்மணி! என்று எச்சரித்தபடி, மாபெரும் இருளில் ஓடி மறைந்தாள். கிளிக் களக் என்று கதவைச் சாத்திப் பூட்டும் ஓசையும் கேட்டது.

* * *

எங்கும் ஒரே அந்தகாரம். அரசி விமலா, இன்பக் கணவரை எண்ணினள்; கண்ணீர் கலுழ்ந்தது. எதிரிகளை எண்ணினள்; இடிந்தது மனம். விறுவிறுத்து ஈர்த்து வந்த தாதி, விட்டுச் சென்றதை எண்ணினள்; வியர்த்தது தேகம். முன்னும் பின்னும் வழி தெரியவில்லை. கல் குத்த, முள் பொத்த, கால் கடுக்க, வெடு வெடுத்துப் பல இடத்தில் தடுக்கி விழுந்தாள். வாய் திறந்து அழவும் பலமில்லை. இருந்தும், தளர்ந்து எழுந்தும், மனம் போன போக்கில் போய்க் கொண்டே இருக்கிறாள் மகாராணி.

அவள் பரிதாபம் கண்டு அலறுவது போல், பறவைகள் கா கி என்று கத்தின. ஓஹோ! விடியற் காலமா! மன அதிர்ச்சியும், இரவெலாம் அளவிறந்து நடந்த அலுப்பும் சேர்ந்து கொண்டது.

* * *

பிரமாண்டமான ஒரு பொய்கை. இடுப்பு வலித்தது. அதனால் கரையில் அமர்ந்தாள். என்ன இது? ஐயோ! அம்மா! தெய்வமே எ எ எ என்று திணறுகிறாளே பாவம்.

ஓஹோ! பிரசவ வேதனையா? ஆதரவாளர் யாரும் இல்லையே! அழுது கதறுகிறாள் அரசி.

ஆஹா! சிசு வெளிப்பட்டது. அறிவு மடங்கியது. ஸ்மரணையே இல்லை அரசிக்கு. இடையில் அரை நாழிகை இதே கிலே.

மெல்ல உயிர்ப்புவந்தது. சிறிதுசிறிதாகக் கண்களைத்திறந்தாள். வரண்டு கிடக்கிறது நாக்கு. பாலனையும் திரும்பிப் பார்த்திலள். செய்வது தவறு தகுதிதான ஒன்றுமே தோன்றவில்லை. மெல்ல எழுந்தாள். நடுங்கியபடி நடந்தாள். எதிரில் இருந்த பொய்கை

அழலுருவாகித் தோன்றி ஆற்றினிற் சரவணத்துள்
குழவிக ளாறுய் நின்ற குருபரஉன் அடைக்கலமே.

யில் இறங்கினள். உடலைத் தூய்மை செய்தாள். படபடத்து, நான்கு கை நீரை வாரிப் பருகினள்.

சீ! என்னடி இது? என்று பின்வாங்கக் காலை எடுத்தாள். கால் எழமாட்டேன் என்கிறது. காரணம் என்ன? குனிந்து நோக்கினள். பயங்கர முதலை!

ஆ! ஐயோ! அம்மா என்று அலறினள். விறு விறுத்து ஈர்த்த முதலை, தீராத் தன் பசியைத் தீர்த்துக் கொண்டது. விதர்ப்ப தேச ராணியை, சத்யசாதனர் தேவியை அகதி யாக்கிய விதி, முதலை உருவில் வந்து இப்படி சதிசெய்துவிட்டது. அதனுடன் முடிந்தது அரசி சரித்திரம்.

பசிதாங்கமுடியாமல், பிறந்தநேரம் தொடங்கி, சிலிர்த்துவீறிட்டு அழுகிறது சேய். இடர்ப்பாட்டிற்கு ஒரு எல்லை யிருந்தால் சகிக்கலாம். இப்படியுமா? அடபாவமே!

* * *

அடடா! அதோ வருகிறுளே யார் அவள்! ஓஹோ உமாவா! அவளும் ஒரு அகதிதான். இளமையில் பெற்றோரை இழந்தாள். அது மட்டுமா? இடுப்பில் ஒரு குழந்தையை ஏந்தக் கொடுத்து, இறந்து போனுன் அவள் கணவன். அந்தப் பத்துமாதப் பாலன் முகம்தான், அவளுக்கு இவ்வுலகில் ஆறுதல். காலையில் வருவாள். நீர் நிறைந்த அப்பொய்கையில் எச்சரிக்கையாக நீராடுவாள். நெற்றியில் நீறு தரிப்பாள். உள்ளம் உருக சிவ நாமத்தை உருவேற்றுவாள். அதன்பின், **ஏகசக்கிரபுரம்** எனும் அடுத்துள கிராமத்தை அடைவாள். வாய்த்த சில வீடுகளில் பிச்சை வாங்குவாள். அவ்வூரில் ஒரு குடிசை அவளுடையது. அதில் சமைப்பாள். உண்டு பசி யாறுவாள். பகல் வேளையில் குழந்தையோடு கொஞ்சுவாள். மாலையில் சிவாலயத்திற்குத் தவருமல் செல்வாள். அவ்வூரில் உள்ள அறிஞர்கள், அடுத்த ஆரண்யத்துள்ள சாதுக்கள் பலர், அவளை யோக்கியமானவள் என்று அறிவர். இனிய அவள் வரலாறு இவ்வளவுதான்.

அவள், வழக்கப்படி நீராட அன்று வந்தாள். குவா குவா எனும் குழவியின் குரலொலியைக் கேட்டாள்.

என்ன? யார் குழந்தை அது? தாய் எங்கே? ஓடோடி வந்தாள்.

அடடா! கொப்பூழ்க் கொடிகூட இன்னும் அறுக்கவில்லையே! தவறிய ஒழுக்கத்தில் பெற்ற தாய், இப்படிப் போட்டு

**என்துயர் நீங்க இன்னும் எத்தனை நாள்கள் செல்லும்
உன்திரு வுள்ளம் யாதோ உணர்கிலன் ஒண்மைமூர்த்தீ!**

விட்டுப் போயினளோ? அல்லது தடுக்க முடியாத சோதனையோ? ஐயோ! என்ன வேதனை? குழந்தை முக ஒளி, அவள் உள்ளத்தைப் பாகாய் உருக்கிவிட்டது. கண்ணிற் கெட்டிய தூரம் நாற்புறமும் நோக்கினள். ஒருவருமே இல்லை.

நாமேனும் எடுத்து வளர்க்கலாமா! விபரீதம் அதனால் ஏதேனும் விளையுமோ என்னவோ? என்று எண்ணுதும் எண்ணினள். படபடக்கிறது மனம்.

அஞ்சாதே உமா! என்று பின்னிருந்து எழுந்தது ஒரு குரல். திடுக்கிட்டுத் திரும்பினள். வித்தக முனிவரான வித்யா சாகரர், அருளொடு தன்னைப் பார்ப்பதை அறிந்தாள். அருமை மகவுடன், அவர் அடிபணிந்து எழுந்தாள்.

உமா! **கண்ணைக் கெடுத்த தெய்வம் கோலைக் கொடுத்தது** என்ற பழமொழியை நீ கேட்டிருக்கலாம்; அதை அனுபவமாக நீ அறியும் நாள் இது. தாயை யிழந்த சேய்க்கு, அப்படித்தான் நீ அகப்பட்டிருக்கிறாய். உயர்ந்த ராஜ லட்சணம் உள்ள இச்சிசுவை, எடுத்து வளர்ப்பது உன் பொறுப்பு. ஊர்ப் பிள்ளையை ஊட்டி வளர்த்தால், தன் பிள்ளை தானே வளரும். வாழ்வதற்கென்றே பிறந்த இம் மைந்தனுக்கு, தர்மகுப்தன் என்ற பெயரை இடு. எடு! வளர்த்த பின் என்னிடம் கொடு! வருகிறேன் என்று வந்த வழியே சென்றார் அந்த அருந்தவர். அவர் சென்ற திசையையே சிறிது நேரம் பார்த்து நின்றாள்.

* * *

என்ன ஆயினும் ஆக என்று துணிந்தது மனம். சுசிவிரதன் எனும் தன் மைந்தனைத் தரையில் கிடத்தினள். எதிரில் இருந்த சேயை எடுத்தாள். நீரால் தூய்மை செய்தாள். தானும் நீராடி அநுட்டித்தாள். சிவ நாம செபத்தின் பின், இரு மைந்தரையும் தோளில் இட்டாள். எளிய நிலையில் பிட்சை எடுத்தாள்.

ஆரம்பத்தில் ஒன்று; இடையில் வந்தது ஒன்றோ? ஏதடி இந்தக் குழந்தை? என்றனர் பிச்சை யிடுபவர்.

தெய்வம்தந்த செல்வம் அம்மா! என்றது அவள் வாய். சிலிர்த்தது உடல். சிந்தியது கண்ணீர். மற்றவர் தன்னை எப்படி மதிப்பிடுகின்றனரோ என்று மறுகியது மனம். கசியும் அவள் மன நிலை கண்ட ஊரவர், அதன்மேல் அவளைக் கேட்பதை விட்டனர். இட்டவர் பிட்சையை ஏற்று ஒருவாறு வயிறு கழுவினள்.

சாரமான அவள் உடல் சத்துவத்தை, போட்டியிட்டு இரு சேய்களும் உறிஞ்சின. எப்படியோ கவிழ்ந்து, தவழ்ந்து,

---

அன்றுநீ அருணை நாதர்க் கருளிய வண்ணம் எற்கு
இன்றுநீ என்முன்வந்தே இன்னருள் செய்திடாயோ.

உருண்டு, இருந்து, எழுந்து, நடந்து, ஓடி ஆடும் பருவம் உதயமாயிற்று. வாய்த்த சேய்களை இரு கண்கள் போல் வளர்த்த உமா, ஒருநாள் மக்களுடன் வந்து, வித்யாசாகரரை வணங்கினள். முக்காலமும் உணர்ந்த அம்முனிவரர், அவர்களை அருளோடு நோக்கி ஆசி கூறினர்.

உமா! வாழ இருக்கும் மக்களை, வளர்த்த புண்ணியம் உனக்கு உண்டு. பாலர் இருவரையும் இனி நான் பார்த்துக் கொள்கிறேன் என்ருர்.

* * *

தாய்க்கு ஓய்வளிக்க எண்ணியது, மக்கள் மனம். பிரமசர்ய நிலையில் பிட்சை எடுத்தனர். அன்னையிடம் அளித்தனர். மற்ற நேரமெல்லாம், கலைகளைக் குருவிடமே கற்றனர். தநுர் வித்தையிலும் தலைசிறந்தோன் ஆயினன் தர்ம குப்தன்.

இன்று அவ்விருவர்க்கும் வயது இருபது. இராமர் லட்சுமணர் போல் தோற்றம்.உற்று நோக்குவள் உமா. புனித அவள் உள்ளம் பூரிக்கும்.

ஒருநாள் மாணவர் இருவரும், ஏதோ மனனம் செய்து கொண்டே இருந்தனர். அந்த சமயம் வந்த உமா, முனிவரை விநயமொடு வணங்கினள். அண்மையில் முனிவர் அவளை அமர வைத்தார்.

ஸ்வாமி! தர்மகுப்தனைத் தாங்கள் அளித்த தைரியத்தால் வளர்த்தேன். பாலொழுகும் முகமுடைய இப்பாலகனை, விட்டுப் பிரிய எப்படித்தான் அந்தத் தாய் மனம் துணிந்ததோ! இதை எண்ணும்போ தெல்லாம் எனக்கு வியப்பாகவே யிருக்கிறது ஸ்வாமி!

உமா! விமலாவா அப்படி விடுபவள்? பிடிழிந்த விதிதான் அப்படிப் பிரித்தது!

அப்படியா! என்ன? அவள் பெயர் விமலாவா? அவளைத் தாங்கள் அறிவீரா?

உமா! அது ஒரு பெரியகதை! கேள் என்று, விதர்ப்ப மன்னர் குடும்ப வரலாற்றை, விவரமாக வித்யாதரர் விவரித்தார்.

ஐயோ! அப்படியா! தர்ம குணம் படைத்த அத்தம்பதிகட்கு, நீடித்து வீழ்ச்சி நேர்ந்ததெனில், கண்ணில்லை! தெய்வத்திற்குக் காதுமில்லை! என்று, கலகலத்து உமா கண்ணீர் பெருக்கினள்.

ஐயனே ஆகுலத்தால் அகமிக நொந்தேன் வேல்சேர்
கையனே கயிலைவாழ்வே கடிதுவந் தருள்செயாயோ.

அவசரப்படாதே உமா! காரணம் இன்றிக் காரியம் இல்லை. விருப்பு வெறுப்பில்லாதவன் விமலன். இப்பிறப்பில் தக்கவர் என்று தெய்வம் தயவு காட்டும்; அது வேறு. அனுபவிக்க வேண்டிய விதியை இடைப்புகுந்து விலக்கிவிடாது; விலக்குமேல் அது தெய்வம் ஆகாது. நீதிபதி நமக்கு வேண்டியவராயின், அதற்காக நாம் செய்த குற்றத்தை மன்னித்து, வாதிக்குப் பாதகம் விளைவிப்பது மரபாமா? எண்ணிப் பார்.

விதர்ப்ப ராஜ தம்பதிகள் செய்த அப்படிப்பட்ட தவறு என்ன என்பதை, அடியாள் அறியலாமா ஸ்வாமி?

முன்வினை

ஆண்மை மிக்கது பாண்டிநாட்டு அரசு. பிரதோஷ காலம் தவறாமல், சிறப்பாக ஒரு பாண்டியன் அமல சிவத்தை ஆராதித்தான். மனைவியும் மகனும் தொடர, மன்னன் ஒரு பிரதோஷத்தில் பெருமான்கோயிலிற் பிரவேசித்தான். பூஜாதிரவியங்களை ஒவ்வொன்ருக தன் கையால் எடுத்துக் கொடுத்தான். அர்ச்சகர் முறைப்படி அபிஷேகம் செய்கிருர். சிவ பூஜையில் கரடிபோல் இடையில் ஓடி வந்தான் ஒருதூதன்.

மன்னர் பெருமா! மூண்ட படையுடன் வந்து சோழன் ஊரை முற்றுகை யிட்டுளன். அமைச்சர்கள் படையுடன் அவனை எதிர்க்கச் சென்றுளர் என்ருன்.

அப்படியா! நிறுத்து அபிடேகத்தை! என்று நிமிர்ந்தான் பாண்டியன். எதிரியை எதிர்க்க, மைந்தனுடன் பரிமேல் ஏறினன். வேகமுடன் போர்க்களம் நோக்கி விரைந்தான்.

சிவபூஜா துரந்தரர் பாண்டியர் என்று ஒற்றரால் கேள்வியுற்ற சிவபக்த சோழர், அமைதிக்கொடி பிடித்து, அருமந்த பாண்டிய அமைச்சர்களை அணுகினர். சோழர் கருத்தறிந்த மந்திரிகள், நீடிக்காதபடி போரை நிறுத்தினர். அரசரைக் காண விரும்பிய சோழரை யழைத்துக் கொண்டு, அரண்மனை நோக்கி வந்தனர். பரிமேல் வந்தான் பாண்டியன். மந்திரிகள் நடுவில் இருந்த சோழ மன்னரைக் கண்டான். ஆரத்திர ஆலோசியாமல், வீசிய வாளால் சோழர் தலையை வீழ்த்தினன். எல்லோரும் திக்பிரமை எய்தினர்.

கதையின் இடையில் மனம் பொருமல், அட பாவி! என்று அலறினள் உமா.

துய்யனே துயரம்தீர்க்க துரிதமா யென்முன்வா நீ
வையகம் போற்றும் பாதா வரதமார் வாழ்வினனே.

பொறு உமா! பொறுத்துக் கேள்! விளைந்தது என்ன என்று விசாரணையும் செய்திலன். சமாதானத்திற்கே வந்தவர் சோழர் என்று, ஆத்திரத்துடன் சொன்னார் தலைமை அமைச்சர்.

அதைச் செவியில் வாங்கிக்கொள்ளவே இல்லை பாண்டியன். சோழராஜ்யம், இனி தன்னதே என்று இறுமாந்தது அவன் மனம்.

காலம் தவறியதென்றாலும், கண்ணுதல் அபிஷேகத்தை இனி யேனும் ஆரம்பித்து நிறைவு செய்யலாமா? என்றார், ஆலயத் தலைமை அர்ச்சகர்.

அட போ ஐய! மற்றொரு சமயம் பார்த்துக் கொள்ளலாம் என்று, அவரைச் சினந்து அனுப்பினன். வாள் வீரர்க்கெல்லாம் பரிசு வழங்கினன். வெற்றிப் பெருமிதத்தால், அளவிலாமல் மதுவை அருந்தினன். காமக் களியில் காலாழ்ந்தான். அரச மைந்தனும் அதே நிலை.

சக்களத்தியர் மேல் இருந்த பொச்சரிப்பால், பாவையர் அவர்கள் கர்ப்பிணிகள் என்றும் பாராமல், கடு விடத்தைப் பாலொடு கலந்து கொடுத்து, அவர்களை அநியாயமாகக் கொன்றாள் அரசி.

இக்கதையைக் கேட்பது கூடப் பாபம்! ஸ்வாமி! போதும் நிறுத்துங்கள்!

உமா! பாண்டியன் முன்செய்த சிவபுண்ணியத்தால், விதர்ப்ப அரசனாகப் பிறந்தான். பின் செய்த தீவினையால், இடைநாளில் வெட்டுண்டு இறந்தான்.

அவன் தேவி முன் செய்த நல் வினையால், அவனுக்கே தேவி யாகி, விமலை பெயர்கொண்டு விளங்கினள்; பின் செய்த பாவத் தால், அகதியாகி முதலை வாயில் அகப்பட்டாள்.

பாண்டியன் மைந்தனும், முன்னைய புண்ணியத்தால் விதர்ப் பன் மகவானான். பின்செய்த பிழையால், பிறந்தபோதே தாய்க் காப்பையும் இழந்தான். இறைவனை ஆராதித்த உனது பார்வை யில், அகப்பட வைத்தது அவனது முன்னைய நல்லூழ்.

உன்மகன் சுசிவிரதன், முற்பிறப்பில் ஏராளசெல்வத்தின் அதி பதியாக இருந்தான்: எச்சில் கையால்கூட காக்கையை ஓட்டாத பரம லோபம் காரணமாக, இப்பிறப்பில் இளமையில் வறுமையை எய்தினன்.

உமாவின் உள்ளம் இதைக்கேட்டு உடைந்தது. தனது மூற்பிறப்பு குறித்துக் கேட்கவே தோன்றவில்லை. காரண காரியம் உணராமையால், நல்லோர்படும் இடர்ப்பாடுகண்டு தெய்வத்தையே நோவது, வளரும் ஆகாமியத்திற்கு வழி செய்வதாகும் என்று வருந்தினள்.

மனனத்தை விட்டு இவ்வளவையும் செவிமடுத்த மக்கள், இடிந்த மனத்தொடு எழுந்தனர்.

குருஸ்வாமி! அடியேங்கள் உய்யும் வழியை உணர்த்தியருளும் என்று, கண்ணீர் பெருக்கிக் கதறி அழுதனர்.

தர்மகுப்தா! எம்பெருமான் விடமுண்ட நாளை, ஏகாதசி என்பர். தூய பெருமான் அமைதி காட்டியது, துவாதசியில். உரியவர்க்கும் சாந்தி உதிக்க, ரிஷபதேவரது இரு கொம்புகளின் நடுவில் சாந்தி நிருத்தம் செய்தனன் சங்கரன். அது, திரயோதசி திதி; அன்று மாலை 4½ மணியி லிருந்து 7½ மணிவரை பிரதோஷ காலம் எனப்பெறும்.

பிறக்கும் ஒவ்வொரு மாதத்தும், இரண்டு பிரதோஷம். வைகறையில் எழுந்து, கடன் முடித்து, அநுட்டித்து, பகலெல்லாம் உணவின்றிப் பஞ்சாட்சர உருவேற்றி, மாலையில் குறித்த நேரத்தில் மாதேவன் ஆலயத்தில், ஆகமம் சொன்ன முறைப்படி ஆராதித்தால், தீராத பிடையெல்லாம் தீரும். வாழ்வதற்கு அதுதான் வழி என்றார் ஆசார்யர்.

அன்று மறுதினமே பிரதோஷ காலம் என்று அறிந்தனர். சுருதி சொன்னபடி நலஞ்சிறந்த வழிபாடு நடந்தது. இப்படியே இருபத்தி நான்கு பிரதோஷம் ஆயிற்று.

ஒருநாள் சுசிவிரதன், நீராடச்சென்று பொய்கையில் இறங்கினன். காலில் ஏதோ தட்டுப்பட, என்ன அது என்று மூழ்கி எடுத்தான். ஆம். ஒரு செப்புக் குடம். மேல் மூடியை முயன்று திறந்தான். பொற்காசுகள் அதில் பொதிந்திருந்தன.

மறுநாள் ஒரு கந்தர்வன், கண்ணுதல் ஆலயம் வந்திருந்த உமாவைக் கண்டான். அழகின் பூரிப்பான தன் மகளை அவள்பால் ஒப்படைத்தான். என்ன ஐயா! என்ன இது? என்றாள் உமா.

அம்மா! தற்பரன் கட்டளைப்படி, இத்தையலை தர்மகுப்தனுக்குத் தருகின்றேன்: பிரதோஷ வழிபாட்டுப்பேறு இது! என்று, அள

உழலுமென் சிந்தைமுற்றும் உன்பதம் தன்னிலூன்றப்
பழமென வந்துநித்தம் பதித்திடாய் பரம மூர்த்தீ.

விலாத செல்வத்தையும் அளித்தான். உமாவின் உள்ளம் அதைக் கண்டும் கேட்டும் உவந்தது. வித்யாசாகரர் முன்னிலையில், நலத் தொடு மறு நாளே திருமணம் நடந்தது.

அற்புதப் பேரழகும், ஞான திருஷ்டியும் வாய்த்த மனைவி யுடன் மகிழ்ந்த தர்மகுப்தன், பொருள் ஆதரவால், தீரம் மிக்க சேனைகளைத் திரட்டினன். தன் தந்தையைத் தடிந்த அரிய பகையை எதிர்த்து அழித்தான்.

மன்னன் மகன் என்று அறிந்த குடிகள், அவனை மகிழ்ந்து வரவேற்றனர். அரியணை ஏறி முடிபுனைந்த அரச மகன், சுசிவிரத னுக்கு மணமுடித்து, தன் வளர்ப்புத் தாயை என்றும் வணங்கி யிருந்தான்.

சிவத்தை, பிரதோஷ காலத்தில் எவரும் சேவிக்க வேண்டும்! அதன்மூலம் குடிகட்கு ஒரு குறைவும் நேராது. பேறு அவ்வழியே நானும் பெற்றேன். இது என் சொந்த அனுபவமாதலின் சொல் கின்றேன் என்று எங்கும் முரசம் எழுப்பினன்.

அதன் பின் அந்தக் கால அருமையை அதிகம் எவரும் அறிந்தனர். வரத சிவத்தை வழிபட்டனர். அதன் பயனை, இம்மை மறுமை வீடு என்னும் மும்மை இன்பமும் கண்டனர்.

வாழ்க சிவன் அடியவர்!

பெரியபுராண அட்டைப்பட விளக்கம் 22

திருநாவுக்கரசர்

(கி. வா. ஜகந்நாதன்.)

அறுபத்து மூன்று நாயன்மார்களில் மூன்றுபேர் சைவ சமய ஆசாரியர்கள். திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந் தரமூர்த்தி நாயனர் என்னும் மூவரே அவர்கள். இவர்களில் இறை வனைத் தந்தையாகவும், தம்மைப் புதல்வராகவும் கொண்டு சத் புத்திர மார்க்கம் என்ற நெறியிலே அன்பு செய்தவர் திருஞானசம் பந்தர். இறைவனை ஆண்டானகவும், தம்மை ஊழியராகவும் பாவித்து அன்பு புரியும் தாசமார்க்கத்திலே தலைநின்றவர் அப்பர்

மாதவர்க்கென்ன குற்றம் மடமையால்செய்திட்டேனே
கோதிலாக் குருவைக்குற்றம்கூறியேதிரிந்திட்டேனே.

சுவாமிகள். தோழமை இருந்து வழிபட்டவர் சுந்தரர். இம்மூவரி லும் மனம் மொழி மெய் என்ற மூன்றினாலும் திருத்தொண்டுபுரிந்த வர் திருநாவுக்கரசர். இவர் இறைவனை எப்போதும் சிந்தித்திருந்தார்; இது மனத்தாற் செய்த தொண்டு. இறைவனைத் தேவாரத்தால் பாடி இன்புற்றார்; இது மொழியினால் செய்த தொண்டு. திருநாவுக் கரசர் என்ற திருநாமமே இத்தொண்டைக் குறிப்பிக்கும். திருக் கோவில் பிரகாரங்களில் உள்ள புல்லைச் செதுக்கிக் கல்லை ஒதுக்கி உழவாரத் தொண்டு புரிந்து வந்தார்; அது மெய்யால் செய்த தொண்டு. அதனால் அவரை உழவாரப் படையாளி என்று போற்றுவார்கள். அவருடைய திருவுருவ ஓவியத்திலும், திருவுரு வப் படிமங்களிலும், அவர் திருக்கரத்தில் உழவாரத்தை ஏந்தியிருக் கும் திருக்கோலத்தில் இருப்பதைக் காணலாம். புல்லைச் செதுக்கப் பயன்படும் கருவி உழவாரம்.

இறைவனிடம் அன்புடையவர்கள் மூன்று கரணங்களாலும் தொண்டாற்றுவார்கள் என்பதை நாவுக்கரசர் வாழ்க்கை தெரி விக்கிறது. காந்தியடிகள் நூல் நூற்றல், வீதி பெருக்குதல் ஆகிய உடலுழைப்பை வற்புறுத்தினார். விநோபா அவர்கள் சிரமதானம் என்று மெய்யால் செய்யும் தொண்டைச் சிறப்பிக்கிறார். அந்தத் தொண்டை முன்பே செய்து காட்டியவர் நாவுக்கரசர்.

நடுநாட்டில் திருவாமூர் என்ற ஊரில் புகழனார் என்றவேளாள ருக்கும், மாதினியார் என்ற பெருமாட்டிக்கும் புதல்வராகப் பிறந்த வர் திருநாவுக்கரசர். அவருக்கு மருள்நீக்கியார் என்ற திரு நாமத்தைத் தாய் தந்தையர் வைத்தார்கள். அவருக்கு முன் திலகவதியார் என்ற பெண் மகவு பிறந்தது.

கல்வியிலும் அறிவிலும் சிறந்து விளங்கிய மருள்நீக்கியார், ஜைன சமயத்தில் சேர்ந்து அவர்களுக்குள் ஆசாரியராக இருந் தார். ஆனாலும் அவர் உள்ளத்தில் வாசனைப் பழக்கத்தினால் தம் பரம்பரைக்குரிய சைவ நெறியின் நினைவே படிந்திருந்தது. அறிவும் ஆசாரமும் ஜைன நெறியைப் பற்றிக்கொண்டிருக்கவும், உள்ளம் அறிவையும் மிஞ்சிச் சைவத்தை நினைக்கவும் இரட்டை வாழ்க்கை வாழ்ந்து வந்தார் மருள் நீக்கியார். ஜைன சமயத் தலைவராக வாழ்ந்தபோது அவருக்குத் தருமசேனர் என்ற பெயர் வழங்கியது.

இந்த இரட்டை வாழ்க்கையிலிருந்து அவரை விடுவிக்க எண் ணினான் சிவபெருமான். தரும சேனருக்குச் சூலைநோய் உண்டா யிற்று. மருத்துவத்தால் தீரவில்லை. ஜைனர்கள் தம் மந்திரம்

நிந்தையில் பக்தரேத்தும் நித்தியப் பொருளே! தேவர்
சிந்தையில்மிளிரும் சோதிச் சிற்பரா அருள்செய்வாயே

களைப் போட்டனர். அவற்றாலும் அடங்கவில்லை. சூலைநோய் சுருட்டி முடக்கிக் குலைத்தது. உயிருக்கு மோசம் வந்துவிடும் என்ற நிலை வந்துவிட்டது. அப்போது அவருக்குத் தம் தமக்கையாருடைய நினைவு எழுந்தது. அவ்வம்மையார் திருவதிகையில் இறைவனுக் குத் தொண்டு புரிந்துகொண்டு வாழ்ந்தார். திருப்பாதிரிப்புலியூரில் இருந்த தர்மசேனர் இரவோடு இரவாக ஒருவருக்கும் தெரியாமல் திருவதிகை சென்று திலகவதியார் காலில் விழுந்தார். "என் தம்பி சிவநெறிக்கு மீளவேண்டும்" என்று இறைவனிடம் விண்ணப்பம் செய்துகொண்டு வந்தவராதலின், திலகவதியார் அவரைத் தேற்றி பஞ்சாட்சரத்தைச் சொல்லித் திருநீறு அளித்து அணியச் செய்து ஆலயத்துக்கு அழைத்துச் சென்றார். அங்கே திருவதிகை வீரட் டானேசுவரர் சந்நிதியில் நின்று, மருள்நீக்கியார் "கூற்றாயின வாறு விலக்ககிலீர்" என்ற திருப்பதிகத்தைப் பாடலானார். அதைப் பாடியவுடன் அவருடைய சூலைநோய் நீங்கியது. இறைவன் அவரை நாவுக்கரசர் என்று அழைத்தான். அது முதல் இறைவனைப் பாடும் தொண்டையும் இடைவிடாமல் செய்து வந்தார்.

ஜைனர்கள் தம் கூட்டத்தினின்று பிரிந்து சென்றதற்காக நாவுக்கரசர்மேல் சினம் கொண்டார்கள். அக்காலத்தில் இருந்த பல்லவ மன்னன் சமணன். அவனிடம் சொல்லி நாவுக்கரசரைத் தண்டிக்கச் செய்தார்கள். அவன் அவருக்கு நஞ்சு அருத்தியும், சுண்ணாம்புக் காளவாயில் இட்டும், கல்லைக்கட்டிக் கடலில் போட்டும் துன்புறுத்தினன். இறைவனுடைய திருவருளையே துணையாகக் கொண்ட நாவுக்கரசர், அந்த இடுக்கணுக்கெல்லாம் சிறிதும் துன் புறாமல் இருந்தார். பிறகு அரசன் அவருடைய அருட்பலத்தைக் கண்டு அஞ்சி சைவ சமயத்தை மேற்கொண்டான்.

பின்பு சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் தலங்களை யெல் லாம் தரிசிக்கும் ஆர்வத்தோடு புறப்பட்டார். தில்லையைத் தரிசித் துக்கொண்டு சீகாழிக்கு வந்தார். திருஞானசம்பந்தப் பெருமான் வாழ்ந்திருந்த காலம் அது. அவரைக் கண்டு பணிந்து உறவாடி னர். சம்பந்தப் பெருமான் நாவுக்கரசரைக் கண்டவுடனே, "அப்பரே!" என்று சொல்லி வரவேற்றார். அதுமுதல் நாவுக்கரச ருக்கு அப்பர் சுவாமிகள் என்ற திருநாமமும் வழங்கலாயிற்று. பின்பு சம்பந்தப் பெருமானிடம் விடைபெற்றுத் திருநல்லூர் சென்று அங்கே இறைவன் திருவடியை அவர் தலைமேல் சூட்டி யருள இன்புற்றார்.

தன்னலம் தலைவிரித்துத் தாண்டவம் செயும் சகத்தில்
உன்னடியார்கட்கு ஐயா! உனையலால் உதவி யாரே.

திங்களூர் என்ற ஊரில் அப்பூதியடிகள் என்னும் அந்தணர், நாவுக்கரசரைக் காணவிட்டாலும் அவருடைய சிறப்பை உணர்ந்து அவரையே வழிபடு கடவுளாகப் போற்றி வந்தார். அங்கே சென்று அப்பூதி யடிகளால் உபசரிக்கப் பெற்றார். இலைகொணரச் சென்ற அப்பூதியடிகளின் புதல்வனைப் பாம்பு தீண்ட அவன் இறந்தான். அதனை அறிந்து திருப்பதிகம்பாடி அவனை மீட்டும் எழுப்பினர் அப்பரடிகள்.

திருஞான சம்பந்தரும் அவரும் சேர்ந்து பல தலங்களைத் தரிசித்தார்கள். திரு வீழிமிழலையில் இருவரும் தங்கியிருந்த பொழுது பஞ்சம் வந்துவிட்டது. அப்போது ஆலயத்துப் படியில் இறைவன் சம்பந்தருக்கும் நாவுக்கரசுக்கும் காசு வைத்தருளினர். அவற்றைக் கொண்டு யாவருக்கும் உணவளித்து வந்தார். பிறகு வேதாரண்யம் சென்று, வேதங்கள் அடைத்துச் சென்றிருந்த திருக்கதவைப் பதிகம் பாடித் திறக்கும்படி செய்தார் அப்பர்.

திருப்பைஞ்ஞீலிக்கு அப்பர் சென்றபொழுது மிகவும் களைப்புற்றிருந்தார். அப்போது இறைவன் அந்தண உருவத்தில் எழுந்தருளிக் கட்டுச் சோறு அளித்து அவர் களைப்பை நீக்கி மறைந்தான்.

இறைவன் எழுந்தருளி யிருக்கும் திருக்கயிலையைத் தரிசிக்க வேண்டும் என்ற ஆர்வம் அவருக்கு மிகுதியாயிற்று. ஆண்டுபல முதிர்ந்து தளர்ந்த உடம்புடையவ ரானாலும் தளராத உள்ளத்தோடு புறப்பட்டார். பலகாவதம் கடந்தபிறகு அவர்கால்கள் தளர்ந்தன; தேய்ந்தன. பின்பு கைகளால் தத்தித் தத்தி நடந்தார். கைகளும் தேய்ந்தன. உடம்பை உருட்டிக் கொண்டே சென்றார். உடம்பும் தேய்ந்துகொண்டு வந்தது. அப்போது இறைவன் ஒரு முனிவர் வேடம் கொண்டுவந்து, "எதற்காக இப்படிச் செய்கிறீர்கள்?" என்று கேட்டார். "கயிலையைத் தரிசிக்க ஆசை" என்றார். "கயிலையாவது, நீர்பார்ப்பதாவது! பேசாமல் ஊருக்குப் போம்" என்று முனிவர் கூறவே, "என் உயிர் போனாலும் இம் முயற்சியை விடேன்" என்று அப்பர்கூற, இறைவன் மறைந்தருளினர். வந்தவர் சிவபிரான் என்று அறிந்து வியப்போடு துதித்த போது, இறைவன் அங்கே ஒரு பொய்கையைக் காட்டியருளி, "அதில் மூழ்கித் திருவையாற்றில் எழுந்தால் அங்கே திருக்கயிலைக் காட்சியைப் பெறலாம்" என்று அருளினன். அப்பர் தம் உடலைப் பழையபடியே பெற்று அப் பொய்கையில் மூழ்கி எழும்போது

பன்னலஉலகைமெய்யாப்படைத்ததுயார்க்கோதெய்வ
மன்னனே!அடியேனுய்ய மனமுவந் தருள்செயாயோ.

திருவையாற்றில் இருந்தார். அங்கே திருக்கயிலைக் காட்சிகண்டு இன்புற்றார்.

பிறகு திருப்பூந்துருத்தி சென்று சிலகாலம் தங்கியிருந்தார். அப்பால் திருப்புகலூர் சென்று தங்கி உழவாரப் பணியையும் தேவாரப் பணியையும் செய்துவந்தார். அவர் உழவாரப்பணி செய்யும் போது இந்திரன் அவரைச் சோதிக்கவேண்டி, அவர் செதுக்குமிடத்தில் பொன்னையும் மணியையும் குவித்தான். அப்பர் அவைகளும் அடியார் காலில் உறுத்துவன என்று கல்லோடும் மண்ணோடும் ஒன்றாக எண்ணி விலக்கினார். அடியார் காலில் உறுத்தாமல் விலக்கியதோடு, தம் கண்ணில் உறுத்தாத நிலையில் அவர் நின்றார். அரம்பையர் வந்து தம் அழகால் மயக்கலாயினர். அவர்களையும் ஏறிட்டுப் பாராமல் தம் தொண்டில் ஈடுபட்டு நின்றார்.

இவ்வாறு பல சோதனைகளில் வென்று புடமிட்ட பொன் போல் ஒளிர்ந்த திருநாவுக்கரசர், ஒரு சித்திரை மாதத்தில் சதய நட்சத்திரத்தில் இறைவன் திருவடி நீழலில் கலந்தார்.

அப்பர் சுவாமிகளுடைய திருவாக்கைத் தேவாரத்தில் காணலாம். அவை 4 முதல் 6 வரையிலும் உள்ள மூன்றுதிருமுறைகளாக அமைந்திருக்கின்றன. அவருடைய வாக்கு நம் உள்ளத்தை உருக்கும் நன்மையை உடையன. அவர் நம்மைப்போல் உலகியலில் உழன்று வருந்தியவர் ஆகையால், அவர் குரல் நமக்கு நன்றாக விளங்குகிறது. நமக்கும் இறைவன் திருவருள் கிடைக்கும் என்ற நம்பிக்கையை ஊட்டும் வாக்கு அது. திருத்தாண்டகம் என்று பெயர் பெற்ற பாடல்களை அவர் மிகுதியாகப் பாடியிருக்கிறார். அவை மனம் கரைக்கும் வாசகங்கள். அதனால் அவருக்குத் தாண்டகச்சதுரர் என்ற திருநாமம் வழங்கும்.

உடம்பினாலும் உரையினாலும் அவர் செய்த தொண்டு இலக்கியங்களிற் புகழ்ப் பெறுபவை. அவர் உரைத் தொண்டின் பயனாகிய தேவாரம், இன்றும் உயிருள்ள அப்பராக நமக்குக் காட்சி அளித்துக் கொண்டு நிலவுகிறது.

உதவுவோர் ஒருவரில்லை உலகினில் எளியேனுக்குன்
பதமலர்த் துணையே யல்லால் பரகதி கண்டிலேனே.

அமிருத மொழி

(ஸ்ரீவத்ஸ ஸோமதேவ சர்மா)

வித்யுத்சலம் ஜீவிதம். மின்னல்போல நிலையற்றது வாழ்வு. நமது கண்முன்னே எத்துணைப் பொருள் தோன்றி மறைகிறது. நட்ட பயிர் நாற்பது நாட்களிலே நாசமாகின்றது. சில மாதங்களிருந்து சிதறுவன சில. பல நாளிருந்து பாழாகுபவை பல. நீரில் வாழ்வனவும் நிலைப்பதில்லை. நிலத்தில் வளிப்பதும் நீடிப்பதில்லை. ஆகாயத்தில் பறப்பவைகளும் அழிகின்றன. மண்ணும் விண்ணும் அழியும். தேவரும் மூவரும் மறைகின்றனர்.

நம்மைப் படைக்கும் நான்முகனும் நசிக்கின்றான். உலகிலே யாவும் சதமல்ல. நின்றாள் சதம் என்றார் ஒருயோகி. "காற்றுள்ள வரை போற்றுவர். அது நீங்கில் பிணமென்று பேர்வைப்பர்." 'நான் என கர்வங் கொள்ளாதே' 'செல்வம் படைத்தேன் எனச் சீறாதே' 'காலன் காத்திருக்கிறான்' 'கணப்பொழுதில் கொண்டு செல்வான்' என்றார் சங்கரர். நீர் மேல் உள்ள குமிழி நிலைக்குமா? மின்னல் தீபம்போல் நிற்குமோ? நாளைக்கென்று ஒன்று நினையாதே! நாளை நாமிருப்பது என்ன நிலை? நற்காரியத்தை நாளைக்கு ஒத்திப் போடாதே! இன்றே செய்துவிடு! பகலில் புண்யம் செய்கிறேன் என்று கூறாதே! பகல் புண்யத்தைக் காலையிலே செய்துவிடு. "நாம் அதைச் செய்தோமா? செய்கிறோமா? என காலன் காத்திருக்க மாட்டான்."

காலன் காலவடிவாகை இருந்து கணப் பொழுது கணப்பொழுதாக நமது ஆயுளைக் கொண்டு செல்கிறான். சென்ற காலம் திரும்பாது! வரும் காலம் தெரியாது. ஒரு கணத்தையும் வீணாக்காதே. வாழ்க்கையில் ஒவ்வொரு கணமும் நமக்குப் பெரும் லாபமாகும். ஆவி சென்றபின் கோடி தனம் கொடுத்தாலும் ஒரு நிமிஷம் ஜீவித்திருக்க முடியுமா?

கணம் பிழைத்திருந்தால் எவ்வளவோ நற்காரியம் செய்யலாம்! காலத்தின் பெருமையை உணர்ந்து பார்! 'ஒரு ஒரு கணமும் விலை உயர்ந்தது' இதைக் கதை மூலம் காட்டுகிறார் வியாஸர். பிரும்ம சர்மன் எனும் பிராமணன் வேதம் ஓதியவன். சாத்திரம் பல கற்றவன். இனிமையாகப் பேசுவான். புரோஹிதத் தொழிலிலே பொருள் நிறையத் தேடிவைத்தான். ஆசைக்கோர் அளவுண்டோ? எங்கே என்ன கிடைக்கும் என அலைவான்!

வாதனை யேற்றும்சித்தம் வதங்குதற் கென்செய்தேனோ
வேதனைச் சிறையில் வைத்தவேலவா மன்னிப்பாயோ.

ஆசை எனும் பாசம் விசித்திரமானது! மற்ற பாசத்தால் கட்டுண்டோர் அசையார். ஆபாசத்தால் கஷ்டப்பட்டவர் ஓடி ஓடி அலைவர். நின்றவிடத்தே நிற்கார். உண்ணவும் ஸமயமிராது. அவஸரம் அவஸரம் என்பார். இந்த வகுப்பைச் சார்ந்தவர் பிரும்ம சர்மா.

உண்ண உட்கார்ந்தார். உண்பதற்குள், போடு போடு! அவஸரம் அவஸரம்! என்று பறந்தார். மனைவி அறிவாளி. பதிக்கு ஸதி புத்தி கூறலாமா? மனைவி மனம் புழுங்கிற்று. நாத! என வாய் எடுப்பாள்! வெட்கி வாய் மூடுவாள். ஒருவேளை உண்ணும் பொழுது ஸாம்பாரைச் சுவைத்தார். அவர் மற்றும் இரண்டு கரண்டி சாப்பிட்டார். ஆசை அடங்கவில்லை! ஆஹா! ஸாம்பார் வெகு ருசியாக இருக்கிறது! ராத்திரிக்கு அப்படியே அதை வைத்து வை என்றார்.

உடனே உரத்த குரலில் ஒரு சிறிப்பு இவ்விருவர் செவியிலும் கேட்டது. இருவரும் சிறிக்கவில்லை. வேறு யாரும் இல்லை அங்கு சிறிக்க. அதை அவஸசரக்கார சர்மா கவனிக்கவில்லை. ஸதி கவனித்தாள். உள்ளே சென்று, நான் உத்தமியானால் சிறித்தவர் எதிரில் வரட்டும் என்றாள். ஏடும் எழுத்தாணியும் ஏந்திய சித்ர குப்தன் அவள் முன்னே தோன்றினன்.

வியந்தாள்! விழுந்தாள் காலிலே! எழுந்து கரங்குவித்தாள்! "ஐயனே! தாங்களன்றோ சிறித்தவர்! "ஆம்." காரணம் யாதோ!" "ஆ, என்னே வாழ்வு! அடுத்த கணத்தில் இவர் உயிர் போகப் போகிறது! இரவு வரை இருக்கப் போகிறாரும்! ஸாம்பார் சாப்பிடப் போகிறாராம்! என்ன அறியாமை! என்ன ஆசை? என்ன ருசி? என்று நகைப்பு உண்டானது என்றார்.

கற்பு கணவனையும் காக்கும்.

ஸதி சொல்ல தயங்கியதை சித்ரன் கூறி விட்டான்! சும்மா வருவனே சித்ரகுப்தன். ப்ரும்மசர்மன் உயிரைக் கொண்டு செல்லவே வந்தான். கற்பரசி இருக்குமிடம் செல்ல யமதூதர் அஞ்சினர். சித்ரகுப்தன் நேரே தானே வந்தான். தருணத்தைப் பார்த்துக் காத்திருந்தான்! இடையில்தான் இந்த ஸம்பவம் நிகழ்ந்தது. பெரியோரைக் கண்டால் பணிந்து வணங்கவேண்டும். தர்மம் அறிந்த கற்பரசி விழுந்து வணங்கினள் சித்ரனை.

வணங்கியவரை வாழ்த்த வேண்டும். இல்லையேல் வணங்கப் படுவோரது புண்யமனைத்தும் வணங்கியவரை வந்தடையும்.

கந்தனே கருணைவள்ளால் கலங்குதே சித்தமெல்லாம்
எந்தையே என்னசெய்வேன் நீயலால் எற்கியாரே.

தீர்க்கஸுமங்கலியாக இரு என்றார் சித்ரகுப்தன். வாழ்த்தைப் பெற்ற ஸதி நகைத்தாள். "ஏன் நகைக்கிறாய்?"

"தேவரும் ஏமாறுகின்றனரே"

"யார் எப்படி ஏமாந்தது?"

"தாங்கள்தான் என்னை வாழ்த்தி ஏமாந்தீர். உமது வாக்குத் தெய்வ வாக்கன்றோ? என் கணவனை நீர் எடுத்துச் சென்றால் வாழ்த்துச் சொல் பாழ்த்துப் போமே!

"ஆம்! ஆம்!! தவறு எவர்க்கு முண்டு! எனது யஜமானன் ஸாவித்திரியை வாழ்த்தி ஏமாற வில்லையா?"

"எங்கள் மாங்கல்ய பலமல்லவோ உங்களை ஏமாற்றியது"

"ஆம்! முற்றிலும் உண்மையே அது! கற்பினால் மாங்கல்யம் பலமுற்றது"

"அது சரி! இப்போது என்ன செய்யப் போகிறீர்"

"என் கடமையைச் செய்ய வேண்டியதுதான்"

"அதெப்படி?

"ரஸம் அன்னம் உண்ணும்போது பொரை ஏறுவதை வ்யாஜமாகக் கொண்டு உன்பதியைக் கொண்டு செல்வேன்"

"ஆஹா! என்கதி ; என்ன! உமது வாழ்த்துக் கதிதான் என்ன?

"அஞ்சாதே! யஜமானிடம் கொண்டு காட்டி உன் கற்பின் பெருமையால் திருப்பிக் கொண்டு வருகிறேன்" என்றார் குப்தன். ப்ரும்மசர்மா பிழைத்து வந்தார். மின்னல்போல் மறைந்தது மறையோன் வாழ்வு!!! கற்பரசி கணவனை மீட்டு வந்தாள் கற்பினால் !!!

1956

Passing time makes fresh pastures for moving humanity to graze. The good shepherd is always in attendance. He now blows his conch-shell to hearten the waning lives by inspiring them into a new atmosphere of hope and joy. By the sweet strains of His flute, He bathes the parched up hearts with the nectar of ever-lasting life. He plays 'hide and seek' with all lives on earth. He is the God in hiding in the folds—the count-

less folds of time. Wherever love is in despair He casts off His folds and reveals Himself. When love gets submerged underneath the waves of worldly passions, He disappears into the folds. He *is not for those who do not bubble with the love.* The waves of passion beat but on the rocky folds of matter; but bubbles of Bhakti or Love dissolve the resistance of the stone walls and disclose the Lord within the Cosmos.

31st December 1955 at Tiruttani was a unique experience. The Lord fulfilled Himself. He was on every step, nay He was on every foot-hold. The rising flood of Divine Love bearing on its surface the countless devotees moved from the sacred tank of Sarvana Poigai—the birth-place of Shanmugah—and swelled and swelled. The Lord's name was on every lip. The assemblage of voices sent up a peal of sound—mighty sound—Haro-Hara—that seemed to lift the mountain heaven-ward. Sri Murugadoss was the one bandmaster, leaning on whom I also mounted up. Old ladies and men, robust fathers, melting mothers, jumping lads, children crawling on the shoulders of their parents, the kite above flashing the symbol of 'ஓம்'—Aum, that is, Muruga as the expression of the one Lord, combined to establish heaven on earth.

Blessed are they who thus entered into the being of the Lord, there to prosper through all time.

In the world of matter, Lord lives like a volcano. The crater is dead like stone, chill, chilling, dead ashes. Even so in the world of matter God gets into hiding. His appearance is holy ashes—an apparent manifestation of

seemingly dead matter, but with the dynamic content of concealed heavenly qualities. When the volcano gets into action, you then see the fire that melts rocks and spells destruction all round. When the Lord, the God-volcano, gets into action, you see the transformation of man into God, of death into life; you see God not as the fire of destruction but as the *fire of the life-love.* This life-giving fire is the very symbol of Siva, the very strains of Krishna's flute, the dance of Nataraja on Muyalagan (Evil) and of Krishna on the Kalinga (in the vicious pond of human misappropriation) nay of Sat Chit Ananda, that is of Muruga with His two great consorts of Valli and Devasena.

On the 31st Dec, at night there flowed into Tiruttani another big flood of devotees who having touched all important centres such as Thiruvanmiyoor, Thirupporur, Thirukkalukkundram, Gurupalani mambakkam, Conjeevaram and other places, streamed into the heights of Tiruttani. At zero hour, the first minute sacred for the darshan of the tower of light, devotees hustled into the streets with lighted camphor to greet the Lord with best wishes for the New Year.

At dawn on the 1st of January 1956, a party moved to Sholingar to start the steps-festival for Sri Laxmi Narayanaswami temple. Great and Saintly men had gathered. The steps are building. With the Lord's blessings the Bhakti flood slowly melted away into the hearts of the devotees and they all returned home carrying the Lord in the tabernacles of their bodies as living Gods of love on earthly paradise.

Thiruppugal Mani

மனம்எனும் மதத்த யானையை அறிவாம்
வலியதோர் அங்குசம் கொண்டு
தினம்தினம் அடக்கி உனது தொண்டாற்றத்
திருத்திஆட் கொள்ளும் நாள்உளதோ
அனையும் மன்னுயிர்க்குத் தாதையும் ஆகி
அனைத்துலகும் புரந்திடு வோய்
துனிவறுத் தொலிக்கும் நான்மறை யறியாச்
சுந்தர விநாயக மணியே !

No. 1506
அசோகா
MILD SCENTED
ASOKA
பீடீஸ்
நெ. 1506

Regd. M. No. 5390, Amirthavachani (1956 தை—அமிர்தவசனி)

Coffee

Ours for Quality

RAW, ROAST OR GROUND

GANESH & CO., (MADRAS), LTD. MADRAS

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள்
நன்மதிப்புப் பெற்ற நகை வியாபாரிகள்

சுவர்ண மாளிகை

A. S. S. M. சோமசுந்தரம் செட்டியார் & Co.

தங்கநகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்.

124, தெற்காவணி மூலவீதி - மதுரை

Tel:—"FAITH" Estd:—1924. Phone:—113

அரிய தெய்வ அருள் நூல்கள்

குகஸ்ரீ. பு. பா. ரசபதி அவர்களின் அருமையான
விரிவுரையுடன்

ஸ்ரீ அருணகிரிநாதர் கந்தர் அனுபூதி	1	0	0
,, 6 திருவகுப்புகள்	1	8	0
ஸ்ரீ பகழிக் கூத்தர் திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழ்	2	0	0
ஸ்ரீ குமரகுருபரர் அருளிய கந்தர் கலிவெண்பா	2	0	0
ஸ்ரீ சேரமான் பெருமாள் திருக்கயிலாய ஞானவுலா	2	0	0
ஸ்ரீ ஔவையார் அருளிய விநாயகர் அகவல்	1	8	0
திருவெம்பாவை திருப்பாவை திருப்பள்ளி யெழுச்சிகள்	0	6	0
திருப்புகழ் மாலை (250 பாடல்கள் மட்டும்)	0	12	0
கந்தக் கதம்பம் (பாடல்கள்) பல பிள்ளைத் தமிழுடன்	1	0	0
தேவி தாஸர்கள் (அச்சில்)			
கணபதி பக்தர்கள் ,,			
முருகனடியார் ,,			

அமிர்தவசனி காரியாலயம் 54, பந்தர் தெரு, சென்னை-1

Printed by K. V. Jagannathan at the National Art Press
91, Mount Road, Madras—18
Edited & Published by S. Muthuswami, 54, Bundar St. Madras-1